REGD M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 11—4—48 | இதழ் 44

## வெகு தூரம்

"தேசத்திலே ஒரு பக்கம் முதலாளி தொழிலாளி சண்டை. மற்றொரு பக்கம் ஜாதி சண்டை. உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற மனப்பான்மை பலரிடம் இருக்கிறது. இவைகள் எல்லாம் காங்கிரசுக்குள்ளே இன்று புகுந்துவிட்டன. ஜாதிமத வித்தியாசம் இல்லையென்று, வித்தியாச மனப்பான்மையுள்ளவர்கள் போது மேடைகளில் நீண்ட பிரசங்கம் செய்வார்கள். ஆனால், அவர்களுடைய ஒவ்வொரு செய்கையும் அவர்கள் மற்றவர்களிடம் தனித் தனியாகப் பேசுவதைப் பார்த்தால் போதுமேடைப் பிரசங்கத்திற்கும் இதற்கும் வெகுதூரம் இருக்கும்"

ஓ. பி. இராமசாமி,
*சென்னைப் பிரதமர்.* (4—4—48)

## இதற்குமுன் இல்லாத

16-ம் பக்கத் தொடர்ச்சி

கம் இதற்கு முன் பெற்றிராத ஒரு வித ஆதிக்க உணர்ச்சியும், ஒரு வகையான சக்தி வியாபகமும் நம்மிடம் தோன்றி வருகின்றன.

புராதன சரித்திர காலங்களில் மிகப்பெரிய நாகரிக ஸ்தாபனங்கள் பல இருந்தன. அவைகளில், போர்ச் சேவகத்தைப் பொறுத்தும், அதற்கான மானிய அனுபவத்தைப் பொறுத்துமே, அரசுகள் நடைபெற்று வந்தன. யுத்த வழியத்தைப் பொறுத்தே பல்லாயிர வருஷங்களாக முடிஅரசுகள் நீடித்துவந்தன. ஆனால், நம் நாளிலே பத்துவருஷ காலத்தில், பல சிம்மாசனங்கள் குப்புறக்கவிழ்த்தப்பட்டுப் போயிருக்கின்றன. இன்னும் பல சிம்மாசனங்கள் ஆஸ்திவாரம் குலைந்து ஆடிக்கொண்டிருக்கின்றன. ஆகவே பண்டைக் காலத் தனது வாழ்வை நம்மிடம் ஒப்படைத்துவிட்டு விடை பெற்றுக் கொண்டதென்று, ஒவ்வொருபாரம்பரியத்திற்கும், ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் நாம் நியாயம் எடுத்துக் காட்டலாம். பெரும் பலம் படைத்த சக்திகளையெல்லாம் நாம் நமக்கு அடிமையாக்கி வருகின்றோம். அவைகளைக்கொண்டு அதி அற்புதமான காரியங்களைச்சாதிக்கின்றோம். பண்டைக்காலத்திலிருந்த எந்த முனிவருக்கும் அவைகளைப்பற்றிய கடுகளவுஞானமும் இருந்திருக்காது.

மனிதவர்க்கத்தின் நீண்ட நெடுங் காலச் சரித்திரம் நமக்குத்தெரியும் அது சம்பந்தமாகக் கிடைத்துள்ள ஆணித்திறமான ஆராய்ச்சிகளையும், சரித்திர உண்மைகளையும் அலசி ஆராய்ந்து பார்த்து, நமக்கு ஏற்பட்டிருக்கும் நவீனப்புரட்சி யுணர்ச்சியின்முன் உலகத்திலுள்ள எல்லா மதங்களையும் வரவழைத்து நியாயங் கூற, முற்படுகிறோம். இவ்வாறு செய்வதில் நாம் கொஞ்சமும் பின் தங்குவதில்லை. இதுவே நமது ஆராய்ச்சியில் தவறாத ஒரு விஷயம். மனித உரிமைகளைக் காப்பதே நமது தர்மம். இது உலகத்திற்கு நூதனமானது. உலகத்தில் மயக்கமும், மடமையும் பலிந்து கிடப்பதால், புராதன காலந்தொட்டு வழக்கமாயிருப்பவைகளையே நீதி யென்றும், [illegible] நம்பி வருகி[illegible]

[illegible]

களும், அரசாங்கங்களுடைய உரிமை[illegible]களும் தெய்வீகம் பொருந்தியவை ஆயின. இதுவே எங்களுடைய தீர்மானம். உண்மையும், வழியுமே எமது விருதுக்கொடி. இவமுறைப் பூர்த்திசெய்ய முடியாத எந்தப்பண்டைக்கால ஒழுங்கு முறைகளையும், குற்றவாளிகளைக் கொல்லும் பொருட்டு, பொருட்காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கும் 'சிரச்சேத' இயந்திரத்தில் போட்டு 'துவம்சம்' செய்யவேண்டுமென்று விரும்புகின்றோம்.

இந்தியா, சீனா, ஜப்பான், எகிப்து முதலிய தேசங்களிலுள்ள மாணவர்கள் தங்கள் தங்கள் சமயக் கோட்பாடுகளைப் பற்றியும் தெய்வீக நூல்களைப் பற்றியுமுள்ள சரித்திரங்களைக் குறித்து விவாதம் செய்து வருகிறார்கள்.

சிக்காகோ நகரத்தின் திறந்த பொது இடங்களில் ஜனங்கள் பகிரங்கமாகச் சாதாரண விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொள்வது போலவே, அவர்கள் மத விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொள்கிறார்கள்.

உலகத்தின் நடுநாயகமான நகரங்களிலிருந்து, அத்தகைய புரட்சி இயக்கம் மலையடிவாரங்களுக்கும் கூடப் பரவிக்கொண்டு வனாந்தரங்களுக்கும் வருகிறது. நான், வாலிபராயிருந்த ஒரு ஆப்ரிக்கரை லண்டன் நகரத்தில் சந்தித்தேன். அவர் ஒரு தத்துவ சாஸ்திர விற்பன்னர். அவருக்கு, மத்திய ஆப்பிரிக்க சர்வகலாசாலை ஒன்றில் சமயபேதங்களைப் பற்றிப் போதிக்கும் வேலையென்று தெரியவந்தது. சமீபத்தில் வெளியான, வாழ்க்கைத் தத்துவங்களை நிரூபிக்கும் "பாட்டு ஆலா" என்னும் பிரஞ்சு நாவல் ஒன்றில் கிராமாந்தரங்களில் வசிக்கும் பூர்வ குடிகள் தங்களுடைய வேலை முடிந்து வீடு திரும்பியதும் கடற்கரையோரங்களில் ஒன்று கூடி எல்லா மதக் கொள்கைகளையும் பேசி எள்ளி நகையாடிக் கொண்டிருப்பது வழக்கமெனக் கூறப்பட்டிருக்கிறது. இன்று நாங்கள் மதப் புரட்சியைப் பற்றிப் பெயரளவில் பறைசாற்றி வருகிறோம் என்பது உண்மை. ஆனால், நாளைக்கு இப் புரட்சி இயக்கம் நுழையாத ஆப்ரிக்கா தேசத்துக் கருப்பு மனிதன் குடிசையோ அல்லது சைபீரியாப் [illegible]

[illegible] இருக்க முடியா[illegible]

எங்களுடைய திடமான அபிப்பிராயம்.

தற்காலத்தில் ஒரே கடவுளைப் பற்றிய கேள்விதான் உண்டே தவிரப், பல கடவுள்களைப்பற்றி மருந்துக்குக்கூட ஒன்றும் பேச்சில்லை. தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் புரட்சி இயக்கத்தைப்போல், மிகப் பிரதானமான வேறு எந்த இயக்கமும் சரித்திரத்தில் இதற்கு முன்பு ஏற்பட்டதில்லை.

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

முழுப்பயனையும் அடைந்து இன்புறக் கூடாது?

ஒருமதம், மக்களுக்கு இடையூறுகளை உண்டாக்காத முறையில்—நல்லவர்களை நடுவாழ்வில் நாசமாக்காத முறையில்—மக்களிடையே உயர்வு தாழ்வு கற்பிக்காத முறையில்—ஒற்றுமையைக் குலைத்து மக்களிடையே பிளவை உண்டாக்காத முறையில்—மக்களை மாக்களினும் கீழான நிலைக்குக் கொண்டுபோகாத முறையில், அறிவையூட்டிவாழ்க்கையைச் செம்மையாக நடத்திச் செல்லக் கூடிய முறையில் அமைப்பதற்கு நாட்டிலுள்ள நல்லறிவாளர்கள் அனைவரும் ஒன்று கூடி ஏன் ஒரு திட்டம் வகுக்கக் கூடாது? இன்னுமா சிறத் தொண்டர்களும், சண்டேசுரர்களும், முத்தநாதன்களும், செருத்துணைகளும், கழற்சிங்கர்களும், கோட்புலிகளும், கோட்சேக்களும் நம்மிடையே உலவ வேண்டும்?

✱


### செங்கல்பட்டு ஜில்லா ஜட்ஜ் கோர்ட்டு

S. C. O. P. 25 of 1948.

B. கோமளம்மாள்—மனுதார்

and கவுண்டர் மனுதாரர்கள்

1. சாரங்கபாணி நாயுடு. 2. பங்கஜம்மாள். 3. எத்திராஜம்மாள். 4. அம்மதன்னி அம்மாள் 5. ராமம்மாள்.—

ஷை மனுதார் காலஞ் சென்ற B. மணவாளசாமி நாயுடு போஸ்டல் டிபார்ட்மெண்டில் இன்சூரன்ஸ் பாலிஸி 8606 முதல் 8610 வரையில் பாலிஸிகளுக்கும் போனஸ் உள்பட சேரவேண்டிய ரூ. 11000-க்கும் வார்சு சர்டிபிகேட் கொடுக்கும்படியாக ஷை நெம்பரில்போட்டிருக்கும் மனு 15—4—48ல் செங்கல்பட்டு ஜில்லா கோர்ட்டில் 11-மணிக்கு விசாரணைக்கு வரும் என்பதை இதனால் தெரிவிக்கலாயிற்று. இப்படிக்கு,

பூண்டி. பார்த்தசாரதி அய்யங்கார்

மனுதார் வக்கீல்.

# மைந்தனைக் கொன்ற மதவெறி!

[நக்கீரன்]

பையனுக்கு ஐந்து வயது. பள்ளிக்கூடம் சென்றிருந்தான். தந்தை, பள்ளிக்கூடத்துக்குப் போய் மைந்தனைத் தூக்கித் தோள்மேல் வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். தாய், தன் புதல்வனை வாங்கி அவனுடைய கால்கள் இரண்டையும் தன் மடியில் இடுக்கிக்கொண்டு, தன்னுடைய கைகளால் குழந்தையின் இருகரங்களையும் பிடித்துக் கொண்டாள். தந்தை, தன் புதல்வனின் தலையைப் பிடித்துக்கொண்டார். குழந்தை, பெற்றோர்கள் தன்னை எடுத்து விளையாடி மகிழ்கின்றனர் என்று கருதிப் புன்னகை புரிந்தபடி இருந்தது. இந்தச் சமயத்தில், ஒரு கையால் தன் புதல்வனின் தலையைப் பிடித்துக்கொண்டிருந்த தந்தை, தன்னுடைய இன்னொரு கையால் ஒரு அரிவாளை எடுத்தார். குழந்தையின் கழுத்தை வெட்டினார். தலை வேறு, முண்டம் வேறாகக் குழந்தை காட்சியளித்தது. வெட்டுப்பட்ட குழந்தையின் உறுப்புக்கள் விதவிதமான கறிவகைகளாகச் சமைக்கப்பட்டன.

* * *

"யார் இந்தக் கொலைபாதகர்கள்? பெற்ற பிள்ளையையே கூசாது கொன்ற கொடியவர்கள் யார்? மனிதர்களா? மிருகங்களா? மிருகங்கள் கூட இப்படிப்பட்ட கொடுமையைச் செய்யாவே! மிருகங்கள் மட்டுமென்ன! உயிரோடு கூடிய எதுவுமே தன்னுடைய பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தையை மனமொப்பிப் படுகொலை செய்யத்துணியாதே! எந்தக் காரணத்தைக் கொண்டு இந்தக் கொடுமையைக் கூசாது செய்தனர்? அதிலும் தாய்பிடித்துக் கொள்ளத், தந்தை, தனயனைத் தலை வேறு முண்டம் வேறாக வெட்டிக் கொன்றான் என்று கூறுகின்றாயே! கொன்றது மட்டுமல்லக், கொன்ற குழந்தையின் உறுப்புக்களைக் கூறு கூறாக வெட்டிக் கறியாகவும் சமைத்தார்கள் என்றும் கூசாது கூறுகின்றாயே! யார் இந்த ஈவிரக்கமற்ற கல்நெஞ்சினர்? கூறு" என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு.

இச் செயற்கரும் 'சிறந்த' காரியத்தைத் திறம்படச் செய்து 'வெற்றி' கண்டவர், நம்மைப் போலச் சாதாரண மனிதனன்று! நாம் தான் உலக மாயையிற் கட்டுண்டு கிடந்து உழல்பவர்களாயிற்றே! நலந் தீங்கறியா நடமாடிகளாயிற்றே! கல்வி யறிவு நிரப்பப் பெறாத கசடர்களாயிற்றே! நெறிமுறை அறியா நீசர்களாயிற்றே! ஒழுக்கம் உணரா உலுத்தர்களாயிற்றே! கடவுளை அறியாக் கயவர்களாயிற்றே! நாத்திகம் பேசும் ஈனர்களாயிற்றே! பெண்டு—பிள்ளை—சுற்றம்—நட்பு என்று பேசும் நிலையற்ற இவ்வுலகச் சுழலில் சிக்குண்டவர்களாயிற்றே! இப்படிப்பட்ட நாமா இத்தகு சிறந்த — ஒப்புயர்வற்ற — நாகரிகமான நல்ல காரியங்களைச் செய்ய வல்லவர்கள்? ஆகுமா இது நம்மால்? அன்பு வடிவான ஆண்டவனை அறியாக் குறைமதியினராம் நாம், அன்பின் வழி நின்று, ஆண்டவனை உணர்ந்து, செந்தண்மை பூண்டு, சீலம் மிக்க செயற்கரும் செயல்களை எப்படிச் செய்ய முடியும்? நாம் எங்கே? நரபலி எங்கே? நாதனடி மறந்த நாத்திகராம் நாம், நாதன் விரும்பும் நரபலி கொடுத்தோம் என்றால், நானிலமும் நம்மை நோக்கிச் சிரிக்குமே!

உலக வாழ்வை மாயை என்று உணர்ந்தவர்கள்! நலந் தீங்கறிந்து நடக்கும் நல்லறிவாளர்! கல்வியறிவு கரை புரண்டோடும் கண்ணியர்கள்! நெறிமுறை அறிந்த நேர்மையாளர்! ஒழுக்க முணர்ந்த உத்தமர்கள்! கடவுளை அறிந்த அருளாளர்கள்! நாத்திகம் பேசா நன்மதியினர் பெண்டு—பிள்ளை—சுற்றம்—நட்பு என்று பேசி உறவு முறை கொள்ளா அறவோர்—அந்தணர்! ஆகிய இன்னபிற செந்தண்மையினர், கடவுளை மறவாது, அவர் கருத்தறிந்து, நாதன் விரும்பும் நரபலியைச் சீலம் மிக்க செந்நெறி யெனக் கொண்டு செய்தனர் என்றால், அதனையன்றோ அருஞ் செயல்—பெருஞ் செயல் என்று அவனி வரவேற்கும்!!

இங்கு பேசப்படும் பிள்ளையைக் கொன்று பெரும் புகழ் பெற்ற 'பெரியார்', மேலேகூறப்பட்ட சீலமிக்கவர்களைப் பார்க்கிலும் சிறந்தவர்! அவருடைய சிறப்பைக் கூற வந்த சேக்கிழார்,

"உள்ள நிறை கலைத்துறைகள்
ஒழிவின்றிப் பயன்றவற்றால்,
தெள்ளிவடித்தறிந்த பொருள்
சிவன் கழலிற் செறிவென்றே,
கொள்ளும் உணர்வினில்
முன்னே கூற்றுதைத்தகழற்கன்பு,
பள்ளமடையாய் என்றும்
பயின்று வரு பண்புடையார்"

என்று வியந்து கூறியுள்ளார். அதாவது, எல்லாவிதமான கலைகளையும் ஒன்றும் விடாமல் படித்ததினால், சிவனுடைய திருவடிகளில் உறவு கொள்வதே முறை என்பதைத், தெள்ளி—வடிகட்டி எடுக்கப்பட்ட பொருள் போலச், சிறிதும் களங்கமற உணர்ந்து, மேட்டிலிருந்து பள்ளத்திற் பாயும் நீர்மடை போன்ற தங்கு தடையற்ற அன்பு வெள்ளத்தை அரன் மாட்டுப் பாய்ச்சும் பண்புடையார் என்பது இப்பாடலின் பொருளாகும்.

பல்கலை பயின்றதால் ஏற்பட்ட 'பழுதற்ற' அறிவின் முதிர்ச்சியானது, இவரைச் சிவன்பால் ஈர்த்துச் சென்று, அவர் மாட்டுப் பள்ளத்தை நோக்கித் தங்கு தடையின்றி ஓடும் வெள்ளத்தைப் போன்ற அன்பை ஆறாகப் பெருகி ஓடும்படி செய்து, அந்த அன்புமடையிலிருந்து பெற்ற தெளிவு, அவருடைய அருமை மைந்தனை—அன்புக் குழந்தையை—அறியாப் பாலகனை—அன்னை பிடிக்கத் தந்தை வெட்டித் துண்டாடும் 'தூயசெயலை' மேற்கொள்ளும்படி செய்ததென்றால், இதனைவிட ஒருவன் பெறற்கரிய பெரும் பேறு வேறு யாதாக இருக்க முடியும்!! இந்தப் பெறற்கரிய பேற்றின் பெருமையையே சேக்கிழாரும்,

"பொருவில் பெருமைப் புத்திரன்
மெய்த்தன்மை அளித்தான்........"

என்று கூறியுள்ளார். அதாவது, "நம்புதல்வன் நமக்குப் பெரும்பேறு அளித்தான்" என்று கூறி அச்சிறுவனைச் சிதைத்த சிறுதியினாரும் அவன் தந்தையும் தாயும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்!

இத்தகைய வெறிச் செயலை விரும்

பிச் செய்த தறுதலைகள் யார் என்பதை அறிய உங்கட்கு ஆவல் பிறக்கும். ஆனால், இந்த ஆவல் மிகுதியால், ஆத்திரம் கொண்டு, அவர்களைத் தறுதலைகள் என்ற தகாத சொற்களால் மட்டும் அழைத்துவிடாதீர்கள். அங்ஙனம் அழைப்பது, தண்ணளிக் கடவுளாம் தயாபரன் அன்பர்களின் சினத்தைக் கிளறுவதாக முடியும். அங்ஙனமாயின், அவர்களைத் தறுதலைகள் என்று அழையாமல், தனயனைத், தாய் பிடிக்கத் தந்தை அரிந்த 'தகைசால் அன்பர்கள்' என்றே அழைப்பது என்று என்னைக் கேட்டுக் திக்குமுக்காடும்படி செய்துவிடாதீர்கள்.

சித்திரைத் திங்கள் 26-ம் (8-5-48) நாள் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருச்செங்காட்டங்குடி என்னும் ஊருக்குப்போனால், தனயனைக் கொன்று தயாபரனுக்கு அமுதூட்டிய தாய்தந்தையரை எப்படிப்பட்ட பெயரால் அழைக்கலாம் என்பதற்குரிய விளக்கத்தை அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் உங்களுக்கு நன்கு புலப்படுத்திவிடும்.

திருச்செங்காட்டங்குடி என்னும் ஊரில் சிறுத்தொண்டர் என்ற பெயருடன் ஒரு நாயனர் இருந்தார். இவர் சிறுத்தொண்ட நாயனராக மாறுவதற்கு முன், பரஞ்சோதியார் என்ற பெயருடன் சோழமன்னனிடத்தில் அமைச்சராய் இருந்து, வேற்றரசர்களை வெல்லவல்லபடைத் தலைமை பூண்டு, வடநாட்டிலுள்ள வாதாவி என்னும் நகரம்வரை சென்று போர்புரிந்து வெற்றிகண்ட ஒரு ஒப்பற்ற வீரனாய் விளங்கியவர். இத்தகைய ஒரு பெரிய வீரன்தான் தம்முடைய கடைசிக் காலத்தில், அடியவர்களிடத்தில் மிகச் சிறியவராக நடந்து, சிறுத்தொண்டர் என்ற பெயரைப் பெற்றதோடு மட்டும் நின்றுவிடாமல், தம்முடைய மதியையும் சிறியதாக்கிப் பெற்ற மகனையே கோன்றேழிக்கும் வெறிச் செயலையும் செய்யவேண்டியவரானார்.

ஒரு நாட்டுக்கு ஒப்பற்ற படைத் தலைவனாய் இருந்து பணியாற்றிப் பெரும்புகழ் பெற்ற ஒரு வீரன், கடைசியில் மிருகத்திலும் கேவலமான கீழ்நிலையை அடைந்து, அறிவுடையோரால் சிறுமதியினனாகக் கருதப்படும் அளவுக்கு, அவருடைய செயல்களைச் சித்தரித்துக் காட்டும் ஒரு புராணம் இருக்குமாயின், அதனை என்ன செய்யவேண்டுமென்பதற்கு அறிவுலகம்தான் தீர்ப்புக் கூறவேண்டும். சிறுத்தொண்டரின் இச்சிறு செயலை விளக்கவந்த ஒரு பெரியபுராண உரையாசிரியர் பின் வருமாறு கூறுகின்றார்.

> "குடியர்கள், வெறியர்கள் தங்களை மறந்து, செய்யுஞ் செயல்களை ஈண்டுக்கருதிக் கொள்க! இங்கே சிறுத்தொண்டரும், அவர் தம்மனைவியாரும்கொண்ட வெறி, கட்குடியால் எழுந்ததன்று. அவர் தம் வெறி அன்புக்குடியினல் எழுந்தது. அடியவர்கள்மீது கொண்ட அன்பு வெறி, மேலிட்டு நின்று, அவ்விருவரையும் செயற் கருஞ் செய்கையைச்செய்ய உந்துகிறது. அவ்வெறி, அவர்கட்கு மேலும் மேலும் களிப்பு ஊட்டிக் கொண்டே போகிறது."

என்று தம்முடைய விளக்கத்தை விளம்பியுள்ளார். கட்குடியினுல் தம்மை மறந்து தகாத காரியங்களைச் செய்ய முற்படும் கயவர்கள்கூடத் தாங்கள் பெற்ற பிள்ளையைக் கண்டால் தூக்கிவாரி அணைத்து முத்தம் கொடுத்து மகிழ்வார்களேயன்றி, இந்தச்சிறுமதியினன்போலத், தங்கள் குழந்தையைக் கொல்லும் அளவுக்குக் குடிவெறியால் ஏற்படும் மயக்கத்தை வளர்த்துக்கொள்ளவே மாட்டார்கள். ஒருவேளை, கடவுளேநேரில் வந்து, "ஏ குடிவெறிக் குப்பா, உன் குழந்தையைக்கொன்றுகறிசமைத்து எனக்குப்படை" என்று கேட்பதாக வைத்துக்கொள்வோம். அப்போதும் அந்தக் குடிவெறிக்குப்பன் என்ன சொல்வான்?

> "சாமியா பிள்ளைக் கறிகேட்டுது? எங்கே அந்தச்சாமி? சாமியைச் சாணியாக்கி விடுகிறேன். நான் அருமையாகப் பெற்றகுழந்தையைக் கொன்று கறிசமைத்துப் போடச்சொல்லிக் கேட்ட சாமிக்குச் சமாதிகட்டி விடுகிறேன்"

என்று கூறுவானேயன்றி, "சாமியா பிள்ளைக்கறி கேட்டுது? அப்படியானல், அரிவாளை எடு! அன்புக்குழந்தையின் அன்னையே! நீ குழந்தையின் காலையும் கையையும் பிடி, நான் தலையைப்பிடித்துக் கழுத்தை அரிகிறேன், பின்னர் நீ கலத்திலிட்டுக் கழுவி, அடுப்பில் வைத்துச் சமைத்துக்கறியமுதாக்கு; ஆண்டவனுக்கு அன்போடு படைப்போம்" என்று குடிவெறியால் மயங்கிக்கிடக்கும் நிலையிலும் துணிந்து கூறவேமாட்டானே. ஆனல் இங்குப் பேசப்படும் அன்புவெறியனும் சிறுத்தொண்டன் தன் அருமைமகனை ஆண்டவன் பேர்சொல்லி அலற அலற அறுத்துக் கறிசமைத்து, 'அடியவர் பெருந்தகைக்கு' அமுதூட்டினுன் என்று, அச்சமின்றி— ஆயாசமின்றி—ஆணவத்தோடு கூறி, மதவெறியை மக்கட்கு ஊட்டும் மதிகெட்டவர்களால் மன்பதை எந்த அளவுக்குச் சீர்குலைந்து விட்டதென்பதை நாடுஉணரவேண்டாமா? இத்தகைய மதவெறியை மக்கட்கு ஊட்டும் கதைகளை நாட்டில் இடம் பெற விட்டதால்தானே, மக்களுள் மாணிக்கங்களாய் விளங்கிய மாபெரும் தலைவர்கள் எல்லாரும் மதவெறிக்கு இரையாகி மடியும் கொடுமை ஏற்படுகின்றது. அன்றை மதவெறியன், தன்மைந்தனைக்கொன்றான்! இன்றைய மதவெறியன், தன் தந்தையயல்ல, உலகத்தந்தையாம் உத்தமர் காந்தியடிகளைக்கொன்றான். இந்த நிலை மாறவேண்டாமா? இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டாமா? மதவெறியை மக்கட்கு ஊட்டும் முறைகள் எந்த வடிவத்தில் தலைகாட்டினுலும், அவை ஒழிக்கப்பட வேண்டாமா? சிறுத்தொண்டருக்கு ஏற்பட்டதாகச் சொல்லப்படும் மதவெறி, குடிவெறியைப் பார்க்கிலும் மோசமாகவன்றோ இருக்கக் காண்கின்றோம். குடிவெறியாவது சிறிது நேரத்துக்கெல்லாம் தெளிந்துவிடக் காண்கிறோம். ஆனல் இங்குப் பேசப்படும் மதவெறிக்குத் தெளிவு ஒரு போதுமே ஏற்படாதாமே! அந்தவெறி மேலும் மேலும் வளரும்தன்மையினதாமே! வளர்ச்சியுறும் இந்த மதவெறி, தான் பெற்ற பிள்ளையைக்கொன்று கறிசமைக்கும் அளவோடு மட்டும் நிற்கவில்லையே! தந்தையைக்கொன்றது! மனைவியைக் கொன்றது! உறவினரைக் கொன்றது! நண்பரைக் கொன்றது! நாட்டின் நல்லவர்களைக் கொன்றது! தன்னைத்தானே தற்கொலை செய்யும்படி செய்தது! இத்தனை கொலைகளும் கொடுமைகளும் ஒரு மதத்தின் பேரால்நடைபெற்றது—நடைபெறுகின்றதென்றால், ஏன் இத்தகைய ஒரு மதத்தை ஒழித்து, நாட்டிலுள்ள நல்லவர்களைக் காப்பாற்றி, அவர்களால் நாம் அடையக்கூடிய

(௨-ம் பக்கம் பார்க்க)

# மேல்நாட்டு விவசாயமுறை

டென்மார்க் நாடு ஒன்றைத்தான் விவசாயத்தால் சிறந்த நாடென்று சொல்லலாம்; அதொன்றே விவசாயத்தை நிரம்ப விருத்தியாகச் செய்யும் நாடு; விவசாய மகசூல்களை பிற நாடுகளுக்கு விளைந்தபடியே அனுப்பாமல், பக்குவப் படுத்தியனுப்பி அதிக இலாபம் அடையும் நாடு. சாதாரண சிறு சமுசாரிகளும் அரசாங்க மந்திரிகளாக வந்து பயிரிடுபவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் தாங்களாகவே கவனித்துச் செய்துவரும நாடு.

தன் வேலைப் பக்குவக் குறைவால், நல்ல மேனி விளைவியாத சமுசாரிகள் அரசாங்க சௌகரியம் ஏதும் அடையக் கூடியதில்லை. மற்றப்படி கடனுக்காக நிலம் ஏலம் போகும் படியாக இருந்தால், அப்படிப் போய் விடாதபடி வாய்தாத் தள்ளி வைக்கப்படும்; வட்டியின் ஒரு பாகம் அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படும்; தீர்வை வசூல் செய்யப்படும். அறுவடை காலத்தில் பெற்றுக் கொள்வதென்ற நிபந்தனையின் பேரில் விதைகளும் உரங்களும் கடனுகக்கொடுக்கப்படும். அடமானக் கடன்களையும் சில வாய்தாக்கள் தள்ளியும் செலுத்திக்கொள்ளக் கூடும்.

சர்க்கரைச் சட்டத்தின்படி குறிப்பிட்ட அளவு நிலங்களே கரும்பு சாகுபடி செய்தல் கூடும். அரசாங்கம் குறிப்பிடுகிற விலைப்படிக்கே சர்க்கரையை விற்கவேண்டும். இறக்குமதியோ ஏற்றுமதியோ அரசாங்க அனுமதி பெற்றுத்தான் செய்யலாம்.

வெண்ணெய், முட்டை, மாட்டுக்கறி, பன்றிக்கறி, ஆடு மாடுகள் இவைகள் வெளிநாடுகள் போய் விற்பது கொஞ்சம் சிரமமாயிற்று. அதற்காகக் காய்கறிகள், பழங்கள் அதிகமாக விளைவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1933ம் வருடத்திய உருளைக் கிழங்குச் சட்டத்தின்படி கைத் தொழில்களுக்காக உருளைக் கிழங்கை உபயோகப்படுத்துவதைப் பற்றிச் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 17 சதவீதம் சர்க்கரைச் சத்துக்குறைபாத உருளைக் கிழங்கு, இன்ன விலையென்றும் திட்டஞ் செய்யப்பட்டது. உருளைக்கிழங்கும் இறக்குமதி ஏற்றுமதி செய்ய அரசாங்க அனுமதி பெறவேண்டும்.

1933ம் வருடத்திய சட்டத்தின்படி செயற்கை வெண்ணெயோ (Margarine) செயற்கை வெண்ணெய்க் கட்டியோ மற்றும் கொழுப்புப் பொருள்களோ செய்வதில் 12 சத விகிதத்துக்குமேல் போகாமல் உள்நாட்டுக் கொழுப்பு சேர்க்கப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டது. 1934ம் வருடமுதல் வேளாண்மையும் வெளிநாட்டு வியாபாரமும் குறைந்தும், அரசாங்கத்தின் விடாமுயற்சியால் பயிரிடுபவர்களின் நிலைமை விருத்தியாகிக் கொண்டுதான் வருகிறது.

## கனடா

மகசூல்களின் விலையிறக்கத்தால் சமுசாரிகளுக்கேற்பட்ட சங்கடங்களை நீக்குவதற்காக அவர்களுக்கு விளைந்துள்ள கோதுமையின் பேரில் ஒவ்வொரு புசலுக்கும் 5 சதவீதம் பண உதவி செய்யப்பட்டது. அதை விற்கிறதாயிருந்தாலும் புசலொன்றுக்கு 50 சதம் கிடைக்கும்படியாகப் பல உதவிகள் செய்யப்பட்டன.

## ஆஸ்திரேலியா

1931-32ம் வருடத்தில் கோதுமை சாகுபடி செய்பவருக்கு உதவியாக 30 லட்சம் பவுன் செலவழிக்கப்பட்டது. 1932 டிசம்பரில் கோதுமைக்கு 20 லட்சம் பவுனும் கோதுமை தவிர்த்துக் கோதுமைத் தாளுள்பட மற்றப் பொருள்களுக்கு 2 லட்சம் பவுனும் செலவழிக்கப்பட்டது. 1933 டிசம்பரில் 30 லட்சம் பவுன் முன்போல விவசாயிகள் உதவிக்காக ஒதுக்கி வைக்கப்பட்டது. 1933-34ம் வருட முடிவில் விற்க முடியாதிருக்கும் கோதுமையையும் அரசாங்கம் வாங்கிக் கொள்வதாக ஏற்றுக் கொண்டது. 1934-35ம் வருடத்திற்கு விவசாயிகள் உதவிக்காக 40 லட்சம் பவுன் ஒதுக்கி வைத்ததின் விளைவின் பேரில் ஒவ்வொரு புசலுக்கும் 3 பென்சு வீதம் உதவி செய்வதென்றும், சாகுபடியான ஏக்கருக்கு 3 ஸில்லிங்கு கொடுப்பதென்றும், பாக்கியிருக்கும் தொகையையும் கோதுமை சாகுபடி செய்வதில் சங்கடப்பட்டிருப்பவருக்கு அவர்கள் சங்கடத்திற்குத் தக்கதாக உதவுவதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

1931-ம் வருடம் சீமையில் பவுன் மதிப்பைக் குறைக்கவும் அதற்கு முன், சீமை 100பவுனுக்கு ஆஸ்திரேலியாவின் 130 பவுன் சமமாயிருந்ததை, 125 பவுனே சமமெனச் செய்து கொண்டது. இந்தியாவைப் போல் பின்னும் சீமைப் பவுனோடு பழைய தாரணைப்படியே இணைத்துக் கொண்டிருந்து சங்கடப்படவில்லை.

ஜெர்மனியில் 100-ஏக்கர் நிலம் 70, 75 பேர் பிழைப்பிற்குப் போதியதாக இருக்கின்றது. அந்த நிலங்களுக்கு எந்த வகையிலும் குறைவாகச் சொல்லக் கூடியதாயிராத சீமை நிலங்களில் 40, 50 பேரே பிழைக்கக் கூடியதாயிருக்கிறது. பாம்பே மாகாணத்தில் என்ன விளைவிருந்தும், பர்மாவிலிருந்து அரிசியும் வடஇந்தியாவிலிருந்து சோளம் முதலிய தானியங்களும் வந்தாக வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையை அவ்வளவு திருப்திகரமாகச் சொல்வதற்கில்லை.

டென்மார்க்கில், கடும் பிரயாசையின் பேரிலேயே விவசாயம் விருத்தியடைந்திருக்கிறது. அரசாங்க உதவியையே எதிர்பார்த்திருக்கும் எந்த நாடும் விருத்தியடைந்ததில்லை; ஜனங்களும் ஊக்கமாக வேலை செய்தாக வேண்டும். டென்மார்க்கில் 1899-ம் வருடத்தில் தரிசு நிலங்களெல்லாம் சில்லறைச் சமுசாரிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டன. அப்பொழுது குடிகாரர்களுக்கு நிலமே கொடுக்க முடியாதென்று சொல்லப்பட்டது. சுறுசுறுப்பாய் வேலை பார்க்கக் கூடியவர்களும் விவசாய வேலைகள் தெரிந்தவர்களாக இருக்கவேண்டுமென்றும், கிரயத் தொகையில் பத்திலொரு பங்காகிலும் உடன் ரொக்கம் கட்ட வேண்டுமென்றும், வற்புறுத்தப்பட்டது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு மட்டும் 3 ஏக்கருக்குக் குறையாமல் 16 ஏக்கர் வரை நிலமும் கொடுத்து, பாக்கிக் கிரயத் தொகைக்கும் ஆடு மாடுகள் வாங்கவும், கடன் கொடுக்கப்பட்டது. வருடத்திற்கு 3 சதவீத வட்டியும் கடனைக் கழிப்பதற்காக 1 சதவீதமும் செலுத்தி வரவேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. சர்க்கார் கடன் தீரும் வரை, நிலத்தைப் பிரிக்கவோ விற்

கவோ கூடாதென்றும் நிபந்தனை செய்யப்பட்டது. இப்படியாக 100 வருடங்களுக்கு நிலங்கள் வாங்கியவருடைய குடும்பத்தை யாரும் விட்டு விலகக் கூடாததாயிற்று. டென்மார்க்கில் வேறு எந்த நாட்டிலும் இராத விதமாகக் கூட்டுறவுச் சங்க உதவிகளும் இருந்து வருகின்றன. பாலியர் முதல் வயோதிகர் வரைக்கும் விவசாயக் கல்வியும் கொடுக்கப்பட்டு வருகிறது. விவசாயக் கல்வியால், திருந்திய முறைகள் எல்லோராலும் அனுட்டிக்கச் சாத்தியமாகிறது. கூட்டுறவுச் சங்கங்களால் விவசாயக் கருவிகளும், நல்லஉரங்களும், விதைகளும் கொடுக்கப்படுவதுடன் விவசாய விளை பொருள்களும், பால், வெண்ணெய் முதலியனவும், முட்டை, பன்றிக்கறி, மாட்டிறைச்சி முதலியனவும் நலலவிலைக்கு விற்றுத் தரப்படுகின்றன. பசுக்களின பாலுக்குத் தக்கதாகவே தீவனமும் போட்டு வர, கூட்டுறவுச் சங்கம் உதவுகிறது. மாதத்திலிரண்டு தடவை பால் சங்கப் பார்வையாளர்கள், அங்கத்தினர்கள் பசுக்களை வந்து பார்த்து அவசியமான யோசனைகள் சொல்லவும், அவர்கள் விரும்பினால், அவர்கள் விவசாயம் சம்பந்தமாகப் பயன் தரும் புத்திமதிகள் சொல்லவுமாக இருக்கிறார்கள். இத்தகைய பிரசாரமும் சமுசாரிகளின் சுய உதவியுமே டென்மார்க் விவசாயத்தை உலகமெல்லாம் மெச்சும் உன்னத நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கின்றன. அவர்களது உண்மையும், சண்டை சச்சரவின்மையும், கடும் உழைப்பும், செட்டான வாழ்க்கையுமே அவர்கள் விவசாயத்தில் பூரணமாக ஈடுபடுவதற்கும் சௌகரியமளித்திருக்கின்றன. சாதாரண சிறு சமுசாரிகளும் மந்திரிகளாக வரக்கூடிய நிலைமையில் அவர்கள் நாடு இருப்பதால், சமுசாரிகளுக்குச் சங்கடங்கள் எதுவும் தோன்றுவதற்கில்லாமலே அரசாங்கம் நடத்திவரப்படுகிறது.

ஜெர்மனியில் 1883 முதல் 1913 முடிய 38 வருடங்களில் விளைவே இரண்டு மடங்காயிற்று. அந்தக் காலத்தில் தரிசாக விருந்த புதிய நிலங்களும் சாகுபடிக்கு வந்ததென்றாலும், மாமூல் சாகுபடி நிலங்களில் தானியங்கள் உருளைக் கிழங்கின் விளைவு 79 சத விகிதத்திற்கு மேலாகவே அதிகமாயிற்று. தரிசு நிலங்கள் சாகுபடிக்கு வந்தால் மேய்ச்சல் இடங்கள் குறைய, கால் நடைகளும் குறைந்திருக்குமென்று நாம் நினைக்கக்கூடும். ஆனால் கால்நடைகளும் குதிரைகளும் குறையவில்லையென்பது மட்டுமல்ல; முன்னிலும் கால்வாசி கூடவே செய்தன. ஆடுகளுக்குப் பதிலாகப் பன்றிகளும் விருத்தியாயின.

டென்மார்க்கில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் சொந்த நிலங்களையே சாகுபடி செய்பவர்களாயும், ஜெர்மனியில் 93-பேர் அப்படிச் சாகுபடி செய்பவர்களாயு மிருக்கின்றனர். ஜெர்மன் காப்பு நிலையமும் (Tariff protection) விவசாயத்திற்கு ஆதரவளிக்க, விவசாயிகளும் தாங்கள் இழந்திருந்த நம்பிக்கையையும் திரும்பப் பெற்று, ஊக்கமாகவும், தீவிரமாகவும் சாகுபடி செய்தார்கள். இதே காலத்தில் கைத்தொழில் அபிவிருத்தி வேலைகளும் தீவிரமாக நடந்து வந்ததால், விவசாய வேலைகளுக்குக் கூலியாட்கள் கிடைப்பதும் அரிதாயிற்று. கூலியாட்கள் கிடைப்பது அரிதாகவே இயந்திரங்களும் உபயோகிக்கச் சௌகரியமாயிற்று. ஜெர்மனியில் நிலக்கடன் பாங்குகளில், யோக்கியமானவர்கள், திறமையாக விவசாயம் செய்பவர்களே கடன் வாங்கமுடியும். விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களும், நல்ல உரங்களும் தீவனங்களும, சமுசாரிகளுக்குத் தருகின்றன. பாற் சங்கங்களும், உருளைக் கிழங்கின் ஈரம் வற்றவைக்கும் சங்கங்களும், விவசாயக் கருவிச் சங்கங்களும் அவர்களுக்கு வெகுவாய் உதவி வருகின்றன. 5 சர்வ கலாசாலைகளும் 3 தொழிற் கல்லூரிகளும் விவசாயக் கல்வி கொடுக்கின்றன. 17 விவசாயப் பள்ளிக்கூடங்கள் நிலையாக வேலை செய்து வருவதோடு, குளிர் காலங்களில், விவசாயத் திருத்த முறைகளும் பல் வேறிடங்களில் போதிக்கப்படுகின்றன. அந்த உபாத்தியாயர்கள் தாங்கள் சொல்லி வைத்தபடி சமுசாரிகள் செய்கின்றார்களாவென்று கவனிக்க, கோடை காலத்தில் அவர்கள் நிலங்களுக்குப் போய்ப் பார்த்தும் உதவி வருகிறார்கள். இப்படியாகத், திருத்த முறைகள் தெரிவதையெல்லாம் சமுசாரிகள் அனுட்டிக்கிறார்கள்; செயற்கை உரங்களையும் பிண்ணாக்குகளையும் தாராளமாக உபயோகிக்கிறார்கள். இவையே ஜெர்மனியின் விவசாய முன்னேற்றத்திற்கு முக்கிய காரணங்கள்.

ஜெர்மனியில் ஒரு ஏக்கர் நிலத்தில் வேறு எந்த நாட்டிலும் விளைவதைக் காட்டிலும் 5 மடங்கு ரை (Rhy)த் தானியம் விளைகிறது. 2 மடங்கு உருளைக்கிழங்கு விளைகிறது. சர்க்கரைக் கிழங்கில் (Beet Root) சர்க்கரை செய்வதற்கு உதவுவது போக, மீதியெல்லாம்மிருகங்களுக்கு உணவாகிறது. 1875-ம் வருடத்தில் ஒரு டன் சர்க்கரை செய்ய 11 டன் கிழங்கு வேண்டியிருந்தது. 1910-ல் 6 டன் கிழங்கே போதுமானதாக இருந்தது. விவசாய வேலைகளில்லாத காலத்தில் விவசாயக் கூலியாட்கள் ஆலைத் தொழில்களும் செய்கிறார்கள். வேலை கிடையாமல் சோம்பியிருப்பதில்லை.

## அமெரிக்கா (U. S. A.)

அமெரிக்கா ஒன்றே, வேறு எந்நாட்டிற்கும் கடன் தர வேண்டியிராத நாடு; பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் மற்றும் பல நாடுகளுக்கும் கடன்கொடுத்திருக்கும்நாடு; உலகத் தங்கத்தில் பேர்பாதிக்குமேல் தன்னிடம் சேர்த்து வைத்திருக்கும் நாடு; ஐரோப்பியப் பெரிய சண்டைக் காலத்தில், தன் விவசாயத்தைக் கைத்தொழில்களை வெகுவாக விருத்திசெய்துகொண்ட நாடு. எந்த நாட்டின் வியாபாரம் விருத்தியாவதற்கும் கைத்தொழில்கள் விருத்தியாக நடக்கவேண்டும். அப்படி உண்டாகும் விளை பொருள், செய்பொருள்களை அக்கம் பக்கம் நாடுகள், அயல் நாடுகள் செழிப்பாக இருந்து வாங்கவேண்டும்; அல்லது அவற்றைக் கடனாகவேனும், அக்கம் பக்க நாடுகளுக்கு விற்கவேண்டும். அந்த அரசாங்கத்திலிருந்தேனும், அக்கம் பக்க நாடுகள் அயல் நாடுகள் கடன் வாங்கவேண்டும். சண்டைச் சமயம் விவசாயத்தைக் கைத்தொழில்களை விருத்தி செய்ய அமெரிக்கா மேற்கண்டவாறு செய்யாது, முன் காகிதமாகச், சரக்குகளாகக் கொடுத்திருந்த கடன்களையும் வட்டியையும் தங்கப்பாளங்களாக வசூல் செய்து வந்தது; புதுக் கடன்கள் கொடுக்கவும் மறுத்தது. மறுக்கவே, தொட்டதெல்லாம் தங்கமாக வரப் பெற்ற மைதாஸ் பாடு சங்கடமானதுபோல, அரசாங்கக் கஜானாவிலும், பாங்குகளிலும் பணமிருந்தும், அமெரிக்கக் குடிகள்

பட்ட சங்கடம் கொஞ்ச நஞ்சமல்ல. அரசாங்கத்தின் மனம்போலவே, மழை தண்ணீரு மில்லாமல் அநேக ஜனங்களும் கால் நடைகளும் சங்கடப்படும்படியாயின. வெளிநாட்டு வியாபாரமில்லாததால் உள்நாட்டிலும் பணவசதியில்லாது போயிற்று. சண்டைச் சமயம் ஏராளமாக மகசூல் விளைவித்தும் மற்றும் பொருள்கள் செய்தும் விற்றுவந்தபடியே, பின்னும் செய்து வந்தாலும் மகசூல்களும் பின்னும் செய் பொருள்களும் ஏராளமாகக் குவிந்தன. அவ்வாறு குவியவே, விவசாயக் கைத்தொழில் வேலைகளையும் நிறுத்தும்படியாக நேர்ந்தது. வேலைகள் நிற்கவே, அனேகர் உணவுப் பொருள்கள் வாங்கவும் காசில்லாமல் சங்கடப்பட்டனர். நாடெங்கும் சமுசாரிகளும் முதலாளிகளும் மேல்தொழில் செய்வதற்கும்கையில் காசில்லாது சங்கடப்பட்டனர். இப்படியான சங்கடங்களையும் அந்த நாடு எப்படித் தவிர்த்ததென்று நாம் அவசியம் அறியவேண்டும்.

அரசாங்கமே பலவேறு விவசாயப் பொருள்களையும் கிரயத்திற்கு வாங்கிப் பிறர்க்கு இனமாகவோ விலை சகாயமாகவோ கொடுக்க முன் வந்தது. வேலையில்லாததால், மழையில்லாததால் உண்ணவும் உடுக்கவுமில்லாமல் சங்கடப்படுபவர்க்கெல்லாம் உதவுவதற்காக முன் வருபவர்களுக்குத்தான் கோதுமையும் பருத்தியும் கொடுத்து அவற்றின் கிரயத்தை பின் சௌகரியம்போல் வாங்கிக்கொள்ளவும் ஏற்றுக்கொண்டது. அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்திற்கு, 4 கோடி புசல் கோதுமை, ஜனங்களுக்கு மாவாகவும் அரைத்துக் கொடுக்க உதவியது. விவசாய விளைபொருள்களையும் ஆடு மாடுகளையும் அந்நிய நாட்டுச் சந்தைகளில் விற்பதற்குச் சௌகரியமாக 30 லட்சம் டாலர் முதலுடன் ஒரு விவசாயக் கடன் சங்கத்தை ஏற்படுத்தியது; அதில் பலவேறு மகசூல்கள் செய்யக்கூடிய நிலங்கள் எவ்வளவிருக்கிற தென்றும் இன்னின்ன மகசூல்கள் இவ்வளவு செய்யலாமென்றும் நிதானிக்கப்பட்டது. அதை அனுசரித்து அந்தப் பிராந்தியங்களில் தீவிரமான வேலை செய்யவும் திட்டம் செய்யப்பட்டது. நிலத்தின் வளம் குறையாமல் விளைவையும் தேவையையும் சரிக்கட்டி வருவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. ஜனங்களுக்குப் புது நிலங்கள் சாகுபடி செய்வதைப் பற்றியும், தரிசு நிலங்களையும் களர் நிலங்களையும் திருத்துவதைப் பற்றியும், பொது நிலங்களை அவர்கள் அனுபவிப்பதைப் பற்றியும் தீர்வைகள் முதலியவற்றைப் பற்றியும் பேசி, சமுசாரிகளுக்குச் சௌகரியமான பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சாதாரணமாக மற்ற பொருள்கள் வந்த விலைப்படி வாங்கி வருவதற்குச் சௌகரியமாக விவசாய விளைபொருள்களின் விலை உயர்த்தப்பட வேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. இதற்குச் சௌகரியமாக விவசாய முக்கிய மகசூல்களை அரசாங்கம் குறிப்பிடுமளவிற்கே சாகுபடி செய்து வருவதென்றும், அப்படிச் சாகுபடி செய்து விளையும் மகசூல்களையும் விற்பனைக்காக ஏற்படும் சங்கங்களின் மூலம் விற்பதென்றும், அந்தச் சங்கமும் அரசாங்க அதிகாரிகள் உத்தரவை யனுசரித்து விற்றுவர வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. விவசாய விளை பொருள்கள் என்ன விலையாக விற்றுவந்தால் சமுசாரிகள் முன்போல வாழச் சாத்தியப்படுமோ, அந்த விலைகளுக்கும் தற்கால விலைகளுக்குமுள்ள வித்தியாசத்தொகைகள் இனமாகச் சமுசாரிகளுக்குக் கொடுத்துவரப்பட்டன. பருத்தி விலையைச் சௌகரியப் படுத்துவதற்காக ஒரு கோடி ஏக்கர் நிலங்களை அதாவது 30 லட்சம் பேல் பஞ்சு தரக்கூடிய நிலங்களைப்பருத்தி சாகுபடி செய்யக்கூடாதென நிறுத்தப்பட்டது; அதன் சொந்தக்காரர்களுக்கும் பண உதவி செய்யப்பட்டது; கோதுமை சம்பந்தமாகவும் சமுசாரிகளுக்குத் தற்காலிக விலைக்கும் சண்டைக்கு முந்திய விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகை உதவிவரப்பட்டது. புகையிலைச் சாகுபடியையும் சுருக்கி அதனால் பாதிக்கப்பட்ட சமுசாரிகளுக்கும் பணஉதவி செய்யப்பட்டது; நெல்லிற்கும், காளி போர்னியாவில் உதவி செய்யப்பட்டது.

நிலம் பெறுமான கிரயத்தில் 50-சத விதம் அல்லது கிரய காலத்தில் செலுத்தப்பட்டிருந்த கிரய சேடத் தொகை, இதனோடு நிலத்தை விருத்தி செய்வதற்காக ஏதேனும் செலவிடப்பட்டிருந்தால் அவ்விதச் செலவில் 20-சத விதமும் கூட்டிப் பார்ப்பதில் இவற்றில் எது குறைவாயிருக்குமோ, அந்தத் தொகையளவிற்கு மேற்போகாமல் நிலக்கடன் பாங்குகள் 4-சத வட்டிக்கு சமுசாரிகளுக்குக் கடன் கொடுத்து வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முன் கொடுத்துவந்த கடன்களையும் மற்றப்படி ஒழுங்காக நடந்து வந்தால் 5-வருடங்களுக்கிடையில் வற்புறுத்தி வசூல் செய்யப்படாதென்றும், அதிக வட்டிக்குக் கடன் கொடுத்திருந்தபோதிலும் நாலரை சத விதமாக வட்டியைக்குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன; இவற்றிற்குச் சௌகரியமாக அரசாங்கம் பண உதவியும் செய்தது. சில பங்குகளுக்கு அரசாங்கம் 4-சத வட்டிக்குமேல் போகாமல்கடன்கொடுப்பதென்றும் அந்தச் சௌகரியத்திற்காக அந்தப் பாங்குகள் தங்களுக்கு வரவேண்டியிருக்கும் அடமானக் கடன்களின் அசல் வட்டிப் பாக்கிகளை 2 வருடத்திற்குக் கேட்கக் கூடாதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இன்னும் தானியங்கள், பாற்பண்ணைப் பொருள்கள், பழவகைகள், பன்றிகள், சர்க்கரை சம்பந்தமாகவும் விவசாயிகளுக்குச் சாதகமாகப் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தீவனப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கும் பல சௌகரியங் செய்யப்பட்டன. மேல் மண்ணைக் காற்று மழை அடித்துக்கொண்டு போகாதபடிக்கும் ஈரம் உலர்ந்து போகாதபடிக்கும், பெரிய சமவெளியின் பக்கமாக 100 மைல் அகலத்திற்கு அரசாங்கச்செலவில் மரங்கள் வைத்து உண்டாக்கப்பட்டன.

* * *

விக்டோரியாவில், கடன் கொடுக்க முடியாதவர்கள் நிலங்களையெல்லாம் விவசாயிகள் சகாயச் சங்கத்தில் ஒப்புவித்து விட வேண்டுமென்றும், அவர்கள் அன்னவஸ்திரத்திற்கு வேண்டிய அளவுமட்டும் அந்தச் சங்கத்திலிருந்து பெற்றுக் கொள்வதென்றும், பாக்கி வரவைக்கொண்டு அவர்கள் கடன்களைத் தீர்த்துவிடுவதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. டாஸ்மோனியாவில், சமுசாரிகளுக்கு விவசாயக் கருவிகள் இயந்திரங்கள் உரங்கள் கால்நடைகள் முதலியன வாங்குவதற்காகத் தகுந்த ஜாமீன் பேரில் 10 வருடங்களுக்குள் திரும்பச் செலுத்தும்படியாகக் கடன்கள் கொடுக்கப்பட்டன. பால் மாடுகள் வாங்குவதற்காகக் கொடுக்கப்பட்ட கடன்களுக்காக வருடத்திற்கு

(12-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 11—4—48 [ஞாயிறு


## மோகன முகாரி!

"அவருடைய இசைத்திறம், ஆஹா, அற்புதமானது, அலாதியான தன்மையுடையது, கேட்பவர், பரவசமடைவர்."

"அப்படியா? இசைவாணருக்குள்ள தனிச்சிறப்பு என்னவோ?"

"என்னவென்று கேட்கிறீர். இராக ஆலாபனத்திலே, மிகமிகச் சமர்த்தானவர். அவருக்கு ஈடு, எவருமே கிடையாது."

இருநண்பர்கள், ஓர் இசைவாணரைப்பற்றி, இதுபோல் பேசிக்கொண்டிருக்கையில், வேறோர் நண்பர் வந்துசேர்ந்தார்.

"யார் விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று வந்தவர் கேட்க, புகழுரை கூறிக்கொண்டிருந்த நண்பர், பூரிப்புடன், "நமது இசைவாணர் வெற்றி ஒளியார் தெரியுமல்லவா! அவரைப் பற்றித்தான், பேசிக்கொண்டிருந்தோம்," என்று கூற, வெற்றிஒளியார் பற்றி, சந்தேகக்குரலில் பேசிய நண்பர், "ஆமாம்! வெற்றி ஒளியாருடைய இராக ஆலாபனத் திறமையைத்தானா இவர் இவ்வளவு அதிகமாகப் புகழ்கிறார்" என்று சலிப்புடன்கூற, இருவர் பேச்சையும் கேட்டநண்பர், கலகலவெனச்சிரித்துவிட்டு, "புதிய வித்வானைப்பற்றியா! இராக ஆலாபனத்திலே, அவருக்கு ஈடேகிடையாது என்று புகழ்கிறீரா? நண்பரே! தங்களுக்கு நண்பர் வெற்றிஒளியாரிடம் அன்பும் அக்கறையும் இருப்பதும், அதனால் அவருடையஇசைத் திறமையைப் புகழ்வதும் நட்புமுறைப்படி கவனித்தால், சரிதான்—ஆனால், உமது நண்பரிடம் நீர் கொண்டுள்ள அன்பிலே, பத்திலோர்பகுதியேனும், இசைக்கலையிடம் கொள்வீரானால், வெற்றிஒளியாரின் இராகஆலாபனத்திறமையைப் பற்றிப் புகழ்ந்திருக்க மாட்டீர்." என்றுகூற, புகழுரை வழங்கியநண்பர், திகைத்துநிற்க, அதேபோது, வெற்றிஒளியாரே அவ்வழி வருகிறார், நண்பர்களின் வேண்டுகோளின்படி, பாடுகிறார் — பெருமையுடன், புகழுரை வீசியவர், சந்தேகித்தவரையும் கண்டித்தவரையும் பார்க்க, கேலிசெய்தவர், புகழ்ந்தவரைப் பார்த்து, "ஐயா! தங்களுக்கு உமது நண்பரின் திறமை விளங்குவது போல, இசைக்கலையிலே, இராகங்களுக்கென்று குறிக்கப்பட்டுள்ள, கட்டுத்திட்டம், முறை, அமைப்பு முதலியன, விளங்கவில்லை. அதனாலே தான், இவருடைய இரைச்சலை இசைஎன்று கருதவும், கூறவும் உம்மால் முடிந்தது. இவர் பாடினாரே இராகம், அது என்னராகம் என்று அவரையேகேள்." என்று தூண்டிவிட, புகழுரைக்காரர், இசைவாணர் பாடிய இராகம் மோகனம், என்றுகூற, சந்தேகித்தவர், "இல்லை, இல்லை—அவர்பாடியது மோகனமல்ல, முகாரி," என்று மறுத்துரைக்க, இந்த இராக இலட்சணத்திலே, நாம் ஏன்தலையிட்டுக்கொள்வது, என்றெண்ணிக்கொண்டு இசைவாணர் போய்விட, பிறகு, கண்டனம்கூறினவர், இருநண்பர்களையும் பார்த்து, "நண்பர்களே! இருவரும் உண்மைக்கு வெகு சமீபமாகவே வந்தீர்கள். அவர்பாடியது மோகன இராகம் என்றுகூறினதிலும் சரி, இல்லை, இல்லை, அவர் பாடியது முகாரி இராகம் என்று கூறியதிலும்சரி, உண்மை இருக்கத்தான் செய்கிறது, ஏனெனில், அவர், இரண்டு இராகங்களுக்கும் உள்ள இலட்சணங்களைச் சரியாகப்புரிந்துகொள்ளாததால், ஒன்றோடொன்று கலக்கவும், ஒன்று மற்றொன்றாக மாறவும், அனுமதித்து, இரண்டு இராகமும் அற்ற, மோகனமுகாரி பாடினார்" என்று கூறினார்.

எங்கே? எப்போது? யார் அந்த நால்வர்?—என்றெல்லாம் கேட்கத்தோன்றும் நண்பர்களுக்கு.

வெறும்கதை—ஆனால் ஓர் கருத்துக்காக அதனைக்கூறினோம்.

சமதர்மக் கட்சியின் அமைப்பாளரும், ஆற்றல்மிக்கவருமான ஜெயப்பிரகாஸ் நாராயணன், மதுரை மாநாட்டுக்கு வந்தவர், தமிழகத்தின் பல்வேறு நகர்களிலே, முழக்கமிட்டிருக்கிறார், புயற்காற்று வேகச் சுற்றுப்பயணம், விறுவிறுப்பான பேச்சு—இவைகளை மக்கள் அறியும்படி செய்யப், பளபளப்பான விளம்பரம்.

கூடுமானவரையில், காங்கிரஸ்ஏடுகள், இந்தச்சமதர்மக்கட்சித் தலைவரின், கருத்துரைகளை, வெளியிட்டன. அவருடைய பிரசாரத்தின் நோக்கம், அதே ஏடுகள் மும்முரமாக ஆதரித்துவரும் காங்கிரஸ் ஆட்சியாளர்களின், ஆதிக்கத்துக்கு எதிராதிக்கம், ஏற்படுத்துவது, என்ற போதிலும், காங்கிரஸ் ஏடுகள், அவருடைய உரைகளை, வெளியிட்டன, ஆச்சரியம். காப்பிசாப்பிடுவது உடலுக்குக் கெடுதல்—என்று கொட்டை எழுத்துகள் தீட்டப்பட்ட போர்டை, ஓட்டல் முன்வாயலில் பொறித்திருக்க மாட்டார்கள்—நோய்போக்கா நிபுணர், என்ற போர்டுடன், எந்த டாக்டரின் வீடும் காட்சிதராது—பூசியிருப்பது பவுடர், முகத்தின் மினுமினுப்புக்குக் காரணம் அது தான் என்று கூறிடும் பூவையரைக் காணமுடியாது—ஆனால் காங்கிரஸ் கெட்டுவிட்டது—காங்கிரசால் பயனில்லை—எனும் கருத்துகளை ஒருவர் பேச, அதனை வெளியிடும் காங்கிரஸ் ஏடுகளைக் காண்கிறோம்! இந்த அதிசயம், முதலில் பலரைத் திகைக்கச் செய்யும், சிந்தனையில் மாசுபடியாதிருக்கும் நிலைபெற்ற சிலருக்கு மட்டும், இதிலே அதிசயப் படுவதற்கொன்றுமில்லை, அச்சமடைவதற்கு வேண்டுமானால், காரணம் இருக்கிறது என்பது விளங்கும் — விளங்கினாலும் அனைவரும் அதனை விளம்பிடுவர், என்று கூறிவிட முடியாது. நாடறியாதிருக்கும்போது நாம் ஏன் அறிவித்து, அல்லற்படவேண்டும், என்று எண்ணும் நற்குணவான்கள்தானே, ஏராளம்!

எந்தக்காங்கிரசின். அமைப்பையும் போக்கையும் ஜெயப்பிரகாசர் கண்டித்துப் பேசினாரோ, அந்தக் காங்கிரசின், பலத்தைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் பாடுபடும் ஏடுகளே கண்டனத்தை வெளியிட்டதிலே, உள்ள ஆச்சரியத்திலே, ஓர் சூட்சமம் தொக்கிநிற்கிறது. சில நகரங்களிலே, சினிமாக் கொட்டகைகள் இரண்டு ஒரே முதலாளியிடம் இருப்பதுண்டு. வழக்கமான முறைப்படி ஒவ்வோர் சினிமாக் கொட்டகையும் ஒவ்வோர் முதலாளியிடம் இருக்குமானால், ஒருதியேட்டரில், மற்றோர் தியேட்டரில் காட்டப்படும் விளம்பரம், வெளியிட மாட்டார்கள். ஆனால் இரு தியேட்டர்களுக்கும், முதலாளி ஒரே ஆசாமியாக இருந்தால், லைட்ஹவுசில், 'காமவல்லி'—என்று வின்செண்டில் விளம்பரமும், வின்செண்ட்டில் 'வீராயி'

என்று லேட்ஹவுஸ் தியேட்டரில் விளம்பரமும், வெளியிடப்படும்.

இந்த முறைப்படியே காங்கிரசை ஆதரிக்கும் ஏடுகள், காங்கிரஸ் பிரசாரம், ஜெயப்பிரகாசின் சமதர்மப் பிரசாரம், இரண்டும், ஒரே முதலாளிக்குட்பட்ட இரண்டு பேசும்படக் காட்சிச்சாலைகள், என்று எண்ணினபோதும்! எனவேதான், காங்கிரசின் போக்கைக் கண்டிப்பவர்கள் மீது வீசும் இருட்டடிப்பை, ஜெயப்பிரகாசர்மீது வீசவில்லைப்போலும்! ஜெயபிரகாசர், அதுவரையில், செல்லப் பிள்ளையாக நடத்தப்பட்டார் — சந்தோஷம்—ஆனால், அதிலே தொக்கி நிற்கும் சூட்சமத்தை எண்ணும்போது, களிப்புக் கருகிவிடுகிறது. அச்சம் அரும்பெடுக்கிறது. ஸ்டாலின் வழியைக் கடைப்பிடியுங்கள் என்று சர்ச்சில் பெர்லினில் பேசினர், என்றால், என்ன எண்ணுவது! இதோ தினசரியும், தினமணியும், மித்திரனும், பிறவும், ஜெயப்பிரகாசர்விஜயம், ஜெயப்பிரகாசுக்கு வரவேற்பு என்று அலங்காரத்தலைப்புகள் கொடுத்துச் செய்தியைச் சித்தரிக்கின்றனவே! என்னென்பது இந்த அதிசயத்தை! எப்படி உணராமலிருப்பது, இதன் சூட்சமத்தை! உணர்ந்தபின், எங்ஙனம், உண்மையைக்கூறாமலிருப்பது.

காங்கிரசைக்கட்டிக் காக்கும்ஏடுகளின் துணையையும்பெற்று, சுற்றுப் பயணம் செய்து, சூறாவளிபோன்ற பிரசாரம் செய்தாரே, ஜெயப்பிரகாசர், அவர் தமிழகத்தாருக்குத் தந்த கருத்துகளை ஓர் முறை—பன்முறை — கவனித்துப்பாருங்கள் — ஒரு கருத்துக்கும் மற்றோர்கருத்துக்கும் ஏற்படும் தழுவல், தாக்குதல், இவைகளைக் கவனியுங்கள், முரண்பாடுகளைக் கவனியுங்கள்; கவனித்தால், நாம், துவக்கத்தில் கூறிய கதையிலே, காட்சி தரும் இசைவாணர்,உங்கள்மனக்கண்முன் தோன்றுவார், மோகனமுகாரி இராகமும் செவியில் விழும்.

ஆலாபனம் செய்தாரே, அது என்ன இராகம்? — என்று யோசிக்கும்போது, ஒருசமயம் மோகனமாகவும், மற்றோர் சமயம் முகாரியாகவும், தோன்றும் விதமாகப் பாடும்வித்வான்போல,ஜெயப்பிரகாசர், பேசிய பேச்சுகளிலே ஓரிடம் தீவிரவாதமும், பிறிதோரிடம் திருவல்லிக்கேணியும் தொனித்திடும்— ஓர் பகுதியைப்பார்க்கும்போது,காங்கிரசின் கபடவேஷத்தைக்களைந்தெறியும், அஞ்சாநெஞ்சனைத்தோற்ற மளிக்கிறார். பிறிதோர் பகுதியைக் காணும்போதோ, காங்கிரசிடம் குரலை இரவல் வாங்கிக்கொண்டு கானம்பாடுபவராகக் காட்சி அளிக்கிறார்—இவ்விதம் இந்த அரசியல் இசைவாணர், வெற்றி ஒளியார், மோகனமுகாரி ஆலாபனம் செய்கிறார்! ஏன்? சமதர்ம வேட்கை கொண்ட நண்பர்கள், யோசிக்க வேண்டிய முக்கியமான விஷயம் — பிரச்னை.

ஜெயப்பிரகாஸ்நாராயணன், காங்கிரசில் இருபதாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்— இப்போது, அதை விட்டு விலகிவிட்டார்; அதாவது அவர் ஓர் மாஜி காங்கிரஸ்காரர்— ஆனால் காங்கிரசில் இருந்தபோது ஏற்பட்ட மெருகு, கலைந்துவிடவில்லை—கொஞ்சக்காலத்துக்காவது கலையாமல்தானே இருக்கும்!

**திராவிடர் கழக**
**மாகாண மாநாடு**
**தூத்துக்குடியில்**
**மே, 1, 2, தேதிகளில்**
**நடைபெற**
**ஏற்பாடாகிவருகிறது.**

அவர் காங்கிரஸ்காரர் அல்ல — ஆனால் காங்கிரசுக்கு எதிரி அல்ல!

அவர் ஓர் சமதர்மி — ஆனால் சமதர்மம் கோரும் மற்றவர்களுடன் சேர மறுக்கும் விசித்திரதர்மி!

அவர் சமுதாயத்திலே உள்ளகேடுகள் ஒழியவேண்டும் என்ற தீவிர நோக்கம் கொண்டவர் — ஆனால், ஜாதிபேதத்தையும் அந்தப் பேதத்தின்மீது கட்டப்பட்ட அமைப்புகளையும் தகர்த்தாகவேண்டும் என்ற போர்க்கோலம் பூண்டவரல்ல-அவருடைய கண்களுக்கு சாதிபேதத்தால் பீடிக்கப்பட்டுள்ள சமுதாயம் தெரிகிறது. அந்த நிலை மாறவேண்டுமென்ற எண்ணமும் பிறக்கிறது. ஆனால் அதே எண்ணம் கொண்டு, தமக்குச் சரியென்று தோன்றிய முறையில், ஜாதி ஒழிப்புக்கான பணி புரிபவர்கள், அவருடைய கண்களுக்கு வகுப்புவாதிகளாகத் தெரிகிறார்கள். அவருடைய மனதிலே கோபமும் கொந்தளிப்பும் ஏற்பட்டுவிடுகிறது.

பழம்பெருமை பேசிப் பயனில்லை என்று அவரே கூறுகிறார், ஆனால் அவரே, பழமையைப் போதிக்கும் அரவிந்தரையும் ரமணரிஷியையும் அழைக்கிறார், ஆத்மீகத் துறையிலே தலைமைதாங்க வருக என்று.

சுரண்டல்காரர்களை ஒழித்தாக வேண்டும், என்று வீரமுழக்கம் செய்கிறார், சுகபுருஷர், விஜயநகரக் குமாரராஜாவைச் சுற்றுப் பயணச் சகாவாகக்கொண்டு.

காங்கிரஸ் ஆட்சி முறைசரியில்லை என்று பேசுகிறார், அதே வாயால், இப்போதைய சர்க்காருக்கு,எதிர்ப்பை ஏற்படுத்தக்கூடாது என்ற இடிமுழக்கமும் செய்கிறார்.

காங்கிரசின் ஆட்சிப்போக்கு, பிற்போக்காளருக்கும் முதலாளிகளுக்கும் வசதி தேடித்தருவதாக இருக்கிறது என்கிறார், அதேபோது, அந்த ஆட்சிக்குத்தலைமைவகித்து நடத்தும் பண்டித நேருவிடம், தமக்கு நம்பிக்கையும், பற்றும் இருக்கிறது என்றும் கூறுகிறார்.

காங்கிரஸ் ஆட்சிசெய்யத்தொடங்கிற்று, ஆனால் பொதுமக்களின் நலன் அதனால் ஏற்படவில்லை என்று கூறுகிறார், ஆனால் அதே சொற்பொழிவில், காங்கிரஸ் ஆட்சியாளர்களின் குறைபாடுகளையும், அவர்கள் செய்யும் தவறுகளையும் எடுத்துக் கொண்டு, அதன்மூலம்,புதியகட்சிக்குப் பலம் தேடக்கூடாது என்று பேசுகிறார் — கண்டிப்பாக எச்சரிக்கிறார்.

ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தால், மக்களுக்குச் சுகவாழ்வு கிடைக்கும்படி செய்வோம், என்று காங்கிரஸ் நல்வாக்குக் கொடுத்ததே யொழிய, நாடாளத்தொடங்கிய பிறகு, அந்த வாக்கைச் செயல்முறைக்குக் கொண்டுவரத் திட்டம் தீட்டவில்லை, என்று கூறுகிறார். ஆனால் அதே போது, சமதர்மக்கட்சி, சுரண்டலை ஒழித்துச் சுகவாழ்வை ஏற்படுத்தும் என்று இவரும் நல்வாக்குத் தருகிறாரேயொழிய, அதற்கான திட்டம் என்ன என்று அறிவிக்கவில்லை.

இவ்விதம் அவருடைய சொற்பொழிவுகளிலே உள்ள கருத்துகள் மோகனமுகாரியாகவே, பெரிதும் இருக்கக்காணலாம். இவருடைய

நோக்கந்தான் என்ன? இவருடைய கருத்துரைகளிலிருந்துமக்கள்பெறக் கூடிய பாடம் யாது? இவர்வகுக்கும் புதியபாதை எது? — இவைபற்றி, சமதர்மம் எனும் சிறந்த இலட்சியத்திலே, உள்ளன்புகொண்ட உணர்ச்சிமிக்க இளைஞர்கள், யோசிக்கவேண்டும். ஆர அமர யோசித்தால் நாம் கேலி செய்கிறோமோ, என்ற சந்தேகம்நீங்கி, உண்மையிலேயே அவருடைய உரை, மோகன முகாரியாகவே இருப்பதை அறிவர்.

இதோ அவருடைய கருத்துரைகளில் சில:—

“பிரிட்டிஷார் ஆளும் போது இருந்ததுபோல் இன்னமும் சமுதாயத்தில் ஒருபக்கம் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் கட்டிக்கொண்டு, பணக்காரர்கள் சிலர் தர்பார் நடத்திவாழ,மற்ருெருபக்கம் கோடானுகோடி ஏழைமக்கள் உண்ண உணவின்றி,உடுக்க உடையின்றி, ஒண்டக் குடிசையின்றி, தவித்து உழன்று வருகிறுர்கள்”

ஆம்! உண்மை! உள்ளத்தை உருக்கும் உண்மை! உலகம் ஒப்புக்கொண்ட உண்மை! நாடு அறிந்திருக்கும் உண்மை! இதனை இவர் கூறியது, கேட்டு ஆச்சரியமோ திருப்தியோ எழ முடியாதபடி இந்த உண்மை ஏற்கனவே, மக்கள் மனதிலே தவழ்ந்தபடி இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? இந்த நிலையைப் போக்கும் பொறுப்பு யாருடையது? இந்தக் கேவல நிலையினுல் இலாபம் அடைபவர்கள் யார்? எவ்வளவு காலமாக இந்த நிலைமை இருக்கிறது? இவை மக்கள் மனதைக்குடையும் கேள்விகள் — மதிவாணர்களிடம், இந்தக்கேள்விகளுக்குச் சரியானபதில் என்ன என்று கண்டறியவே மக்கள் துடிக்கின்றனர்.

வைதிகர் பேசுகிறுர், “இது நீ வந்த வினையடா தம்பி! வடக்குமலையானை வேண்டிக்கொள். அவன் கண்திறந்து பார்த்தால், உன் கஷ்டம் தீரும்” என்று. யுகயுகமாகக் கூறிவந்த பதிலாயிற்றே, இது பயன் தரும் பதிலல்லவே, என்று மக்கள் கூறுகின்றனர்.

தேசியவாதி, “நாடுவிடுதலையாகட்டும் நண்பனே! உன் நலிவு நீங்கும்” என்று கூறினுன். வறுமை வந்தது வெள்ளையனுல் என்ருன்.

மாஸ்கோ மணம் தேவை என்றனர், மற்றும் சிலர்.

ஜெயப்பிரகாசர் என்ன கூறுகிருர்?—என்ன கூறினுர்?—இந்தநிலை போகவேண்டும், என்ருர் — ஆம்! ஏழை சிந்தும் ஒவ்வொரு துளி கண்ணீரும், இதைத்தான் கூறுகிறது. ஆனுல்,வழிஎங்கே? எப்படி இந்தநிலையைப்போக்குவது? என்ன திட்டம்?—ஜெயப்பிரகாசர் மௌனம் சாதிக்கிருர்—ஏழையின் நிலையைக் கண்டு கதறுகிருர்—அந்த முகாரியை—சமதர்ம இலட்சியம் பேசி மோகனத்துடன் இணைத்துக் காட்டுகிருர்—இதுதவிர, அவர் தீட்டும் திட்டம் என்ன?

காங்கிரஸ், இப்போதும் சரி, வேறு எப்போதும் சரி, இந்நாட்டிலே, ஏழை முழுவாழ்வு பெற்றிருக்கிறுன், என்று சொல்லியதுண்டா? ஜெயப்பிரகாசர், சித்தரித்துக் காட்டும் மாளிகை, மண்குடிசை, சீமான், பராரி, பிரபுவின்பன்னீர், ஏழையின் கண்ணீர், எனும், கண்கசக்கிச் சொற்கள், காங்கிரசின்பிரசார அகராதியிலே இல்லையா? காங்கிரஸ், இந்த நிலையை மாற்ற வேண்டாம் அல்லது மாற்ற முடியாது என்று கூறிவிட்டதா? அல்லது இன்றைய நிலையில்,காங்கிரசுக்கு, இவ்விதமான ஓர் மாறுதலை ஏற்படுத்தும் அளவு, வலிவு இல்லையா? ஏன், காங்கிரஸ் வலிவும் வனப்பும், வாய்ப்பும் பெற்று, நாடாளும்இந்த நாட்களில், இந்த மாறுதலை ஏற்படுத்தவில்லை?—இந்தக் கேள்விக்கு அவருடைய பதில் என்ன? காங்கிரசின் போக்கிலேயோ, கொள்கை, வேலைத் திட்டத்திலேயோ, இந்த அவசியமான மாறுதலை ஏற்படுத்தும் ‘சக்தி’ இல்லையா?—புகுத்தவே முடியாதா?—முயற்சித்தாரா? நம்பிக்கையை இழந்தே போனுரா?—இவைகளை விளக்கமாகப் பேசவேண்டும்—பேசினுல் தெரியும், இன்று அவருக்குத் தரப்பட்டுள்ள செல்லப்பிள்ளை நிலை நிலைக்கிறதா என்பது!

காங்கிரஸ் ஓர் போராடும் ஸ்தாபனம்—போர் முடிந்து விட்டது சுயாட்சி கிடைத்ததும்—ஆகவே இனிக் காங்கிரஸ் இருக்கவேண்டிய அவசியமில்லை, என்றுதெரிவிக்கிருர். சரி, அப்படியானுல், காங்கிரசைக் கலைக்க வேண்டுமென்று, ஏன், முயற்சிக்கவில்லை—அல்லது, இந்தக் கருத்துடையவர் அனைவரையும் ஒன்று திரட்டும் காரியத்தில் ஏன், நேற்றுவரை ஈடுபடாமலிருந்து வந்தார்.

“காங்கிரஸ் அபாயத்திலிருக்கும் போது யார்யார் தூரநின்றுவேடிக்கை பாரத்தார்களோ, யார் யார் கதர் என்ற வாசனையே இல்லாமலிருந்தார்களோ, யார் யார் கள்ளமார்க்கட் பண்ணி அதைமறைக்க மோட்டார்களில் மூவர்ணக் கொடிகளைக் கட்டிக் கொண்டார்களோ, கதர்த் தொப்பி போடுகிருர்களோ, அம்மாதிரி பேர்வழிகள்தான் இன்று காங்கிரஸ்காரர்களாகி விட்டனர்.”

என்று, காங்கிரசைப் படம் பிடித்துக் காட்டுகிருர், ஜெயப்பிரகாஸ். சரியான படம்பிடிப்பு! ஆனுல் ஓர் கேள்வி. இந்த நிலை, திடீரென ஏற்படவில்லை, ஏற்பட்டுக்கொண்டே வந்தது—அந்த நேரத்தில் ஏன், ஜெயப்பிரகாசர் தடுக்கவில்லை—போராட்டகாலம் என்று சாக்குக் கூறுவதானுல்—அதற்குப் பிறகு, ஏன், காங்கிரசின் தலைவர்களிடம், மந்திராலோசனை மண்டபத்திலே, இதுபற்றிய விவாதத்தைக் கிளப்பவில்லை? அதுவும் போகட்டும், இந்த நிலைமை ஏற்படும் என்பதை, சர்வ தேசக் கண்ணேேட்டம் உள்ள பண்டித நேரு, அறியாரா? முன்கூட்டி அறிந்துகொள்ளாவிட்டாலும், இப்போதாவது தெரியாதா? தெரிந்து, அவர் செய்தது என்ன? ஏன் சிறுவிரலையும் அசைக்காது இருக்கிருர்? இந்த நிலைமை — கள்ளமார்க்கட்காரர்கதர்ச்சட்டையில் உலவுவது—அவருக்குச் சர்வ சாதாரணம், என்றோ, பெரிய தீங்கல்ல என்றோ, தோன்றுகிறதா? அல்லது, இந்த நிலைமை ஏற்படத்தான் வேண்டுமென்று எண்ணுமளவுக்கு, பண்டிதரின் இயல்பே மாறிவிட்டதா? அல்லது, இந்த நிலைமையை மாற்றக் கூடிய அளவு அவருக்கு ஆற்றல் இல்லையா?— இவைகள், ஒதுக்கித் தள்ளிவிடக் கூடிய கேள்விகள் அல்ல—ஆனுல் ஓர் புதியகட்சி ஆரம்பிக்கும் தலைவர் இந்தக் கேள்விகளைக் கவனிக்கவும் மறுத்து, பண்டித நேரு, மிக மிக நல்லவர், என்று பஜனையும் பாடுகிருர். அவ்வளவு நல்லவர் கண் முன்பாக எப்படி இவர் குறிப்பிடும் அவ்வளவு பொல்லாதவர்கள் காங்கிரசில் ஆதிக்கம் பெற முடிந்தது? ஏன், ஜெயப்பிரகாசர் இதற்குப் பதிலளிக்க மறுக்கிருர்.

காங்கிரஸ் முதலாளிகளின் முகாமாகிவிட்ட செய்தியை, இவர் கூறித்

தானு, மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சுதந்திர இந்தியாவின் முதல் பட்ஜட்டை, சுகவாசி சண்முகம் தீட்டிய ஒரு சம்பவம் போதாதா இதை விளக்க! மக்கள், ஏன் அவ்விதம் காங்கிரஸ், முதலாளிகளின் முகாமாக மாறிவிட்டது? எப்படி, இன்று ஜெயப்பிரகாசர் பேசும் சமதர்மத்தை விட, மிக மிகச் சுவைமிக்க சமதர்மத்தைப் பேசி வந்த, பண்டித நேரு, இதை அனுமதித்தார்? ஏன் அவரால் இதை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் பெற முடியவில்லை? என்னும், இவைபற்றித்தான் அறிய விரும்புகிறார்கள். ஜெயப்பிரகாசர், இந்தப்பொருளாதாரப் பிரச்னையை, ஏதோ, நல்வழி, நீதிநெறி விளக்கம், கூறுவது போன்ற முறையிலே, பேசிக்கொண்டு சென்றிருக்கிறாரே யொழிய, விளக்கம் கூறி, மாற்றுத் திட்டம் கூறி, மக்கள் மனதில்உள்ள சந்தேகத்தைப் போக்கவில்லை. மோகன முகாரி பாடிவிட்டுச் செல்கிறார்!!

அரசியல் பொருளாதாரப் பிரச்னைகளைப் போலவே, சமுதாயப் பிரச்னைகள் பற்றியும், ஜெயப்பிரகாசர், தெளிவும் திட்டமும் அற்ற முறையிலேயே பேசிவிட்டுச் சென்றார்.

“நம் நாட்டில் படிப்படியான ஜாதிமுறை யிருக்கிறது. அதன்பின் ஜாதிக்கு ஜாதி, மேல்கீழ் என்ற உணர்ச்சியால் ஒரு ஜாதியை மற்றோர் ஜாதி ஆள நினைக்கிறார்கள். கிடைத்தசுதந்திரம் நீடிக்க வேண்டுமானால், ஜாதிப்பித்தொழிந்தால் தான் முடியும்.”

ஜெயப்பிரகாசரின் திருநெல்வேலிச் சொற்பொழிவில் இந்தக் கருத்துரை காணப்படுகிறது. உண்மை. இதனைஎடுத்துக்கூறியதற்கு நன்றி. ஆனல், இந்த ஜாதி முறை தோன்றக் காரணம் என்ன? கேடுகள்யாவை? அறிவுபரவிய இந்நாளிலும் இந்தமுறை நீடித்திருக்கக் காரணம் என்ன?—இவைகளைக் கவனிக்காவிட்டால், பிரச்னையின் முழு விவரம், எப்படித் தெரியும்? ஏன், இவைகளைக் கவனிக்க மறுக்கிறார்? ஜாதிப்பித்தம் ஒழியவேண்டும் என்கிறாரே, மருந்துவகை என்ன? மகான்கள் கூறிவிட்டனர், இந்தப் பித்தம் வேண்டாம் என்று, நாட்டுத் தலைவர்கள் நாற்பதாண்டுகளுக்கு மேலாகவே நல்வழி இது அல்ல என்று கூறிவிட்டனர், நாட்டுத் தந்தை என்று மக்கள்புகழும்நிலையை அடைந்த உத்தமரும் கூறினர். இவ்வளவுக்குப் பிறகும் ஒழியாத பித்தம், ஜெயப்பிரகாசரின், உரையைத் தானு, மருந்தாகக் கொண்டு மறையும்? பித்தம் தெளியமருந்து எது? ஏன் அதைக்கூறாத மருத்துவர், பித்தநோய் இருப்பதையும், அதனல் விளையக்கூடிய வேதனையையும் மட்டும் தெரிவித்தார்—அதிலும் ஏற்கனவே மக்கள் இதனை அறிந்திருக்கும் நிலையில்! இந்தப் பித்தம் போக்கச் சுயமரியாதைச் சூரணம்கொடுத்தால், அவர்கள், நாத்திகர்கள் என்று நிந்திக்கப்படுவது! திராவிடத் தைலம் தேய்த்துமுழுகினல், இந்தப் பித்தம் போய்விடும், ஏனெனில் திராவிடக் கலாசாரம், ஒன்றேகுலம் என்ற உயர்ந்த தத்துவத்தைக் கொண்டது என்று கூறினல், அவரை, வகுப்புவாதி என்று வாய் கூசாதுகூறி விடுவது! என்றேனும் ஓர்நாள், ஏதேனும் ஓரிடத்தில், ஜெயப்பிகாசர் போன்றபாரேனும் ஒருவர் மேடை ஏறி, ஜாதிப்பித்தம் கூடாது, என்று சந்தம் பாடுவதா! போதுமா? பித்தம் போகுமா? ஜாதிப்பித்தம் போகவேண்டுமானல், மக்கள் மனதிலே மாபெரும் புரட்சி ஏற்படவேண்டுமே! அந்த அறிவுப் புரட்சிக்கான திட்டம் உண்டா, ஜெயப்பிரகாசரிடம்? சொற்பொழிவுகளில், ஒரு குறிப்பும் தென்படக் காணோம். ஆக, அரசியல் பொருளியல், சமுதாய இயல், அதற்கு அடிப்படையான அறிவியல், ஆயெவற்றிலே, மாறுதல், ஏற்பட மார்க்கம் கூறாமல், நிலைமையை விளக்கி முகாரிபாடி, மக்கள் நிலையை நல்ல தாக்குவதாக ஆசைகாட்டி, மோகனம்பாடி விட்டுச்சென்றிருக்கிறார்!

காங்கிரசுக்கு எதிரிடையாக ஓர் கட்சி அமைக்க இந்தப்பிரசாரத்தை இவர் நடத்துவது தெரிந்தும், நம் நாட்டுக் காங்கிரஸ் ஏடுகள் அவருடைய கருத்துரைகளை வெளியிட்டதன் காரணம், இப்போது விளங்கும் என்றுநம்புகிறோம். ஜெயப்பிரகாசர், அடிப்படைகளைத் தொடவில்லை—ஆகவே அவரால் தங்கள் ஆதிக்கத்துக்கு ஆபத்து வராது, என்ற நம்பிக்கை இருப்பதாலே தான், காங்கிரசின் போக்குக்கண்டு வெகுண்ட மக்கள், அடிப்படையைத் தொடும் வேறுகட்சிகளிலே, போய்விட்டால், ஆதிக்கக்காரருக்கு ஆபத்து; அந்த ஆபத்துஏற்படாதபடிதடுக்க, ஜெயப்பிரகாசரின், மோகனமுகாரி முறை பயன்படும், எனவே இதனைப் பரப்புவதிலே, ஆபத்து இல்லை, என்று எண்ணியுமேதான், அந்த ஏடுகள், ஜெயப்பிரகாசரின் பிரசாரத்தை, விளம்பரப்படுத்தின. ஆனல், எவ்வளவு நாட்களுக்கு இதுசாத்யமாகும்!

●

## டாக்டர் சுப்பராயன் விலகினர்.

சென்னை உள்நாட்டு அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் தம்முடைய பதவியை 3-4-48ல் ராஜிநாமாச் செய்து விட்டார். பிரதமர் தம்முடைய இலாக்காவில் தலையிட்டுத், தம்மைக் கலக்காமல் காரியங்களை நடாத்த முற்பட்டதால்தான் ராஜிநாமாச் செய்ய நேரிட்டதென்று டாக்டர் சுப்பராயன் தம்முடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ஆனல், முதல்வர், அவ்விதம் ஒன்றும் நிகழவில்லையென்று அவருடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்

---

## நோட்டீஸ்

செங்கல்பட்டு டிஸ்டிரிக்டு கோர்டில்

S. C. O. P. No. 19 Of 48

மனுதார்

மைனர் சொர்ணம்பாள் அடுத்த சினேகிதர் முத்து முதலியார்.

கவுண்டர் மனுதார்

மைலப்ப முதலியார்

இதனல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பதாவது. மனுதார் புருஷன் இறந்துபோன ஆறுமுக முதலியாருக்கு வரவேண்டிய கடனை வசூல் செய்ய மனுதார் தனக்கு வார்சு சர்டிபிகேட் கொடுக்கவேணுமென்று மனுகொடுத்த மனுவை வாயிதா 12—4—48-க்கு போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனை யுள்ளவர்கள் வாயிதா தினம் கோர்ட்டில் தெரிவித்துக்கொள்ளலாம்.

C. சீரங்காசாரியார்.

மனுதார்வக்கீல்

செங்கல்பட்டு 6—4—48

### மேல்நாட்டு விவசாய

7-ம் பக்கத் தொடர்ச்சி

எட்டு மாதங்களாக மூன்று வருடத்தில் மாதந்தோறும் அவர்கள் வெண்ணெய்க் கிரயத்தில் கழித்துக் கொள்ளப்பட்டன. உருளைக் கிழங்கு விதை உரங்களுக்காக கொடுக்கப்படும் கடன்கள் அந்தந்த மகசூலிலிருந்தே தீர்த்துவிடப்பட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலேயே கொடுக்கப்பட்டன.

வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பதாகத் தங்கள் நிலங்களை விருத்தி செய்யும் சமுசாரிகளுக்கு அரசாங்கம் வட்டி இல்லாமலும் கடன் கொடுத்தது. இந்தக் கடனை 18 மாதங்கள் கழிந்த பின் 6 மாதத்திற்கொரு தடவையாக 20 தவணையில் செலுத்த வேண்டும். நமது அரசாங்கம் நம்முடைய நிலங்களை விருத்தி செய்வதற்காக இப்படி ஏதேனும் உதவி செய்கிறதா?

மழையில்லாததினாலோ மற்றப் படிக்கோ; தீர்வை செலுத்தச் சிரமமாகும் போதும், நிலத் தீர்வைக்குக் கூட விளைவில்லையென்றாலும், அரசாங்கம் தீர்வையை வசூல் செய்து விடுகிறது. சமுசாரிகளோ ஆடு மாடு மேய்ப்பவர்களோ கடன் வாங்கிக் கெட்டுப் போனாலும், அரசாங்கம் அவர்களுக்கு நல்ல உதவி செய்து திரும்பவும் தொழில் செய்ய ஊக்கப் படுத்துகிறது.

## பிரிட்டனில் நாடகத் திருநாள்

ஷேக்ஸ்பியர் பிறந்த இடமாகிய ஸ்டாபோர்ட்—ஆன் ஆவென் என்ற ஊரில் பிரிட்டனின் மிக முக்கியமான தேசியத் திருவிழா, ஏப்ரலிலிருந்து அக்டோபர் மாதம் வரை வெகு சிறப்பாக நடைபெற இருக்கிறது. எல்லாச் சிறந்த நடிகர்களும் இவ்விழாவில் பங்கெடுத்துக் கொள்வார்கள். சென்ற வருடம் 52 நாடுகளிலிருந்து 2½ லட்சம் பிரதிநிதிகள் வந்திருந்தனர். இவ்வாண்டு இன்னும் அதிகம் பேர் எதிர்பார்க்கப் படுகின்றனர்.

இதே போல் தற்காலத்திய சிறந்த நாடகாசிரியரான பர்னாட்ஷா அவர்களை கௌரவிப்பதற்காக மால்வர்ன் திருநாள் என்ற ஒரு நாடக விழாவும் நடைபெறவிருக்கிறது.

* * *

கடலிலே செல்லும் கப்பல்களுக்கும் கரையோரத்திலிருக்கும் தபாலாபீஸுகளுக்குமிடையே ரேடியோ—தந்தி போக்கு வரவு மூலம் தொடர்பு இருந்து வருகிறது. இந்நிலயங்களின் வழியாக கப்பல்களின் மூலம் உலகத்தின் எல்லாப் பாகங்களுக்கும் செய்திகளை அனுப்பவோ அல்லது பெறவோ சாத்தியமாகிறது. பிரிட்டனில் உள்ள இந்த வசதியின் காரணமாய் சென்றஆண்டு 657651 ரேடியோ தந்திச் செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

* * *

தற்போது கிரீன்விச்சிலிருக்கும் ராயல்வான ஆராய்ச்சி நிலயத்தை ஹர்ஸ்ட் மான்ஸ்யூ மாளிகைக்குமாற்றுவதற்கான ஏற்பாடுகள் வெகு மும்மரமாக நடந்து வருகின்றது. இப்புதிய நிலயத்தில் 100 அங்குலம் வட்டமுள்ள [Diameter] ஒருமிகப் பெரிய தொலை நோக்குக்கருவி [Telescope] ஒன்றும் அமைக்கப் படும்.

* * *

சமீபத்தில் கூடிய 35 நாடுகள் மாநாடு ஒன்று ஐக்யநாடுகள் கடலோரப் போக்குவரத்து ஸ்தாபனத்தின் தலைமை நிலயத்தை லண்டனில் அமைப்பது எனத் தீர்மானித்தது. இந்த ஸ்தாபனம் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு தனிப்பிரிவாக இருக்க வேண்டுமா அல்லது பொருளாதார சமூகக் கவுன்சிலின் கீழ் ஒரு கமிஷனாக வேலை செய்தால் போதுமா என்பது இன்னும் முடிவாகவில்லை.

## சோவியத் முறைகளில் சில

பொதுவுடைமையின் நோக்கம் என்னவெனில் செல்வத்தை எல்லோருக்கும் சமமாகப் பங்கிடுவதோடு, ஒருவர் நலத்தை எண்ணிப் பிறரும் வாழ்க்கை நடத்தும்படி செய்வதே. இதைச் சாதிப்பதற்கு, முதலில்சொத்தைத்தேசியமயமாக்குவதோடு, தொழிலையும் தேசிய மயமாக்குவது அவசியம். கூட்டுறவுப் பண்ணைகள் என்று சொல்பவைகளை ரஷ்யா ஏற்படுத்தியிருக்கிறது. வேலை செய்வதற்கு உரிமை பெற்றவர்களிடம் சிறுசிறு தாக்குகளாக நிலங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்தப்பிரிவுகளெல்லாம் ஒருபெரிய பிரிவாகவும், பல பெரிய பிரிவுகள் சேர்ந்து ஜில்லாக்களாகவும், ஜில்லாக்கள் சேர்ந்து பிரதேசங்களாகவும் சேர்க்கப்படுகின்றன.

அந்தப் பிரதேசங்களின் தலைவனுக்கு 'கமிஸார்' என்று பெயர். அங்குள்ள விளைவுகளுக்கு அந்தக் 'கமிஸாரே' பொறுப்பாளியாகிறான்—உழுவதற்கு யந்திரங்கள் முதல் விதைப்பதற்கு விதை ஈறாக அரசாங்கத்தாரால் விநியோகம் செய்யப்படுகிறது. நஷ்டம், தோல்வி இவைகளுக்கு அபராதம் உண்டு. அதே மாதிரி, லாபம், வெற்றி இவைகளுக்கு வெகுமதியும் உண்டு.

சொந்த சொத்து ரஷ்யாவில் வைத்துக் கொள்ளக் கூடாது என்பதைக் கேட்பவர் பலர் நம்புகின்றனர். ஆனால் அது அப்படியில்லை. முதன் முதலில் சொந்தமாகச் சொத்து வைத்துக்கொள்வது தடுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது பணத்தைக் குவிக்காமல் சொந்த உபயோகத்திற்காக எவ்வளவு வைத்துக் கொள்ளலாமென்று வரையறுக்கப் பட்டிருக்கிறது.

இதேமாதிரி பலதரப்பட்ட கைத்தொழில்களும் தேசிய மயமாக்கப் பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுடைய யோக க்ஷேமத்தை அரசாங்கம் கவனித்துக் கொள்கிறது. ரஷ்ய லக்ஷியத்தின்படி அங்குள்ள சொத்துக்கள் எல்லாம் பொதுச் சொத்துதான். எவனும் தகடுதத்தமாகச் சௌகரியம் அடையவோ, அல்லது வேலை செய்யாமல் சொத்து சேமித்துவைக்கவோ விடப்படுவதில்லை.

நமக்குத் தெரிந்த வரையில் ரஷியாவில் ஒரு மனிதன்கூட வேலையில்லாமல் இல்லை. ஒவ்வொருவனுக்கும் ஒருவேலை சம்பாதித்துக் கொடுக்கப்படுகிறது. அந்த வேலையினால் அரசாங்கத்திற்கு நன்மையோடு, வேலை செய்பவனுக்கும் நன்மை ஏற்படுகிறது. ஒவ்வோர் ஆண் பெண் ஆகியவர்களுடைய க்ஷேமத்தைக் கவனிக்கவேண்டியது அந்த அரசாங்கத்தின் கடமையாகும்.

தொடர் கதை

கற்பனைச் சித்திரம்



[4—4—48 தொடர்ச்சி]

"அக்கா, அந்த வைரக் கம்மல் காரியைப் பார்த்தாயா! என்று நான் கமலாவைக் கேட்டேன். அந்தச் சமயத்திலே எனக்கிருந்த கோபம் ஏதாவது பேசி, கவனத்தை வேறு பக்கம் திருப்பினாலன்றி, மிகப்பொல்லாததாகப் போகும் போலிருந்தது. ஆகவேதான் அக்காவிடம் பேசினேன்."

"பார்த்தேன்; அவளுக்குக் கிளி மூக்கு, மைக்கண்ணு, குறுங் கழுத்து, மகா தளுக்குக்காரியாக இருப்பாள்" என்று அக்கா சாமுத்திரிகா லட்சணம் பற்றிப் பேச ஆரம்பித்தாள். நான் அந்தப் பெண்ணைப் பார்த்தேனே தவிர, அக்காவைப் போலப் பார்த்ததும் "போட்டோ" பிடிப்பதுபோல் அவளுடைய அங்க இலட்சணங்களைக் கவனிக்கவில்லை. எனக்கோ மனம்தடுமாறிக்கிடந்தது. ஏன் இராது? தான் காதலித்த முத்து வேறோர் மங்கையுடன் உல்லாசமாகப் பேசிக்கொண்டு வரக்கண்டால் என் மனம் நிம்மதியாகவா இருக்கும்? என் தங்கச்சங்கிலி எப்படியோ வேறொருவளிடம் சிக்கி, அதனை அவள் அணிந்துகொண்டு என் எதிரிலே வந்தால், அவளுடைய கழுத்தின் அழகைக்கவனித்துக்கொண்டா இருப்பேன். சங்கிலியை வெடுக்கெனத்தானே கழற்றப் போவேன். நான் மட்டுமா? யாரும் அப்படித் தானே செய்வார்கள்? அதுபோல் தான் எனக்கு இருந்தது முத்து அவளுடன் வந்தபோது. அந்த ஆத்திரம் எனக்கு வரக்காரணம் என் ஆசை. ஆசைக்குக் காரணம் அவன் காட்டிய ஜாடைகள். ஆசைகாட்டி மோசம் செய்வது அழகா?"

"என்னடி விமலா யோசிக்கிறாய்?" என்று கமலா கேட்டாள்.

"ஒன்றுமில்லை; அவள் தளுக்குக் காரிதான். நீ சொன்னது உண்மை தான்" என்றுநான் கூறினேன்.

"ஆனால் அவனிடம் அவள் ஜம்பம் சாயாது. அவன்பலே பேர்வழி" என்றாள் கமலா.

"வீட்டுக்குப் போகலாமா?" என்று நான் கூறினேன். எனக்கு அங்கு இருக்கப் பிடிக்கவில்லை. என் நிலையைத் தெரிந்துகொண்ட கமலா, "பைத்யக்காரப் பெண்ணே! இதற்காகவா ஆயாசப்படுவது? அவன் யாரோ, நீ யாரோ. உங்களுக்குள் என்ன சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது? எதற்கு இவ்வளவு ஆத்திரம்? துணிக் கடைக்குச் சென்றால் கண்ணுக்குப் பிடித்தமான சல்லாச்சேலைகளையுமா வாங்குகிறோம். அதுபோல் தான் மனித வாழ்விலும் மனம் நாடுவதோ பல. கிடைப்பதோ ஏதோ ஒன்று. ஆனால் ஆடவருக்கு இருக்கும் வசதி பெண்ணினத்துக்குக் கிடைப்பதில்லை, கிடைக்காததால் தான் உலகத்திலே எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டும் இன்னமும் குடும்பம் என்ற ஒருமுறை நிலைத்திருக்கிறது. பல மலர்களிடை சென்று தேன் மொண்டு உண்டு ரீங்காரம் செய்யும் வண்டுகள் போல் ஆடவர் உள்ளனர். மாதர் மலர்போல் உள்ளனர். காரிகைகள் கசங்கிய ரோஜா" என்று அக்கா கூறினாள்.

"ஆமாம்! உண்மைதான்! எனக்குத் தூக்கம் வருகிறது. வீடு போவோம் வா" என்று மறுபடியும் கூப்பிட்டேன்.

"தூக்கமா? துக்கமா?" என்று அக்கா கேட்டாள். நான் பதில் கூறாமலேயே, அக்காவின் கையைப் பிடித்து இழுத்தேன். கமலா சிரித்துக்கொண்டே புறப்பட்டாள். வீடு வந்து சேர்ந்தோம். நவன உத்சவம் யாராருக்கோ எதை எதையோ கொடுத்திருக்கும். நான் கண்டது தலைவலிதான். அன்று இரவு எனக்குத் தூக்கம் வரவில்லை. அந்த மங்கை யாரோ! அவளைத்தான் அவன் உண்மையில் காதலிக்கிறான் போலிருக்கிறது. அவர்கள் ஜாதிப்பெண், கொஞ்சம் அழகாகவும் இருக்கிறாள், பணக்காரி. அவர்கள் மிக மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டிருந்தனர். அவளிடம் என்னை 'தாசி' என்று அவன் கூறின பிறகு, அவன் எப்படி என்னை மணப்பான்? மணந்துகொள்ள மனமிருந்தால் இப்படியா கூறுவான்? என்றெல்லாம் எண்ணி ஏங்கினேன்.

காலையிலே காப்பி சாப்பிடும் போது, "கேட்டாயா விமலா. அவள் யாரோ டிப்டி கலெக்டரின் மகளாம். அவர்கள் ஜாதிப்பெண்ணாம். அவன் தான் கலியாணம் செய்துகொள்ளப் போகிறானாம். அவள் பத்தாம் வகுப்பிலே படிக்கிறாளாம். பந்து ஆடுவாளாம், பாட்டுக்கூடத் தெரியுமாம்" என்று சேதி கூறினாள் கமலா.

"நானும் அப்படித்தான் இருக்குமென்று எண்ணினேன். அக்கா அப்படிப்பட்டவளைக் கலியாணம்செய்து கொள்ள ஏற்பாடு நடக்கும்போது அவன், ஏன் என்மீது ஏதோ அளவு கடந்த ஆசை இருப்பதாகவும், என்னைக் கலியாணம் செய்து கொள்வதாகவும் கூறினான்" என்று நான் கேட்டேன்.

"போடி முட்டாளே! இதுகூட ஒரு ஆச்சரியமா! குழந்தைகள் அழுதால் உனக்கு என்ன வேண்டும், ஆனை வேண்டுமா, பூனை வேண்டுமா என்று கேட்டு எப்படியாவது அழுகையை நிறுத்துகிறதுபோல, அவன் உன்னைச் சம்மதிக்கச்செய்ய ஏதோ ஆசை வார்த்தை பேசினான். நீ ஏன் நம்புகிறாய்" என்று அக்கா கூறினாள்.

"ஆண்களுக்கு இந்தச் சுபாவம் இருக்குமென நான் எண்ணவேயில்லை அக்கா. பெண்களிடத்தான் இது இருக்கும் என எண்ணினேன்" என்று கூறினேன்.

"விமலா, இதோ இன்னும் சொல்கிறேன் கேள். இன்று அம்மா கிராமத்துக்குச் செல்கிறார்கள். ஜெமீன்தாரோ வெளியூர் போயிருக்கிறார். இன்று மாலை நான் அவனை இங்கே வரவழைக்கிறேன், மாடி

ருயா? அந்த வைரக்கம்மல்காரி வீட்டில்தானே இருக்கிறாள் அவளைப் பற்றியும், உன்னைப்பற்றியும் அவன் வாயாலேயே என்னென்ன சொல்லச்சொல்கிறேன் பார்" என்று அக்கா சபதம் கூறிவிட்டு மேலும் சில சொன்னாள்.

"ஆண்கள் எந்தப்பெண்ணை எந்த நேரத்தில் கண்டாலும் அந்த நேரத்திற்கு அவளைத்தான் மேனகை, திலோர்த்தமை, ரம்பை, ஊர்வசி என்று சொல்வார்கள். "கண்ணே, கனியே, கட்டிக்கரும்பே" என்று கொஞ்சுவார்கள். உன்மீது இருக்கிற பிரியம் எனக்கு யார் மீதும் இல்லை என்று உறுதி கூறுவார்கள். எப்படியாவது அந்த நேரத்திலே அவள் மனம் குளிர்ந்தால் போதும் என்று தான் எண்ணுவார்கள். நான் என்ன அவளைவிட சிவப்பா? என்று கேட்டால, சிவப்பு என்ன ஒரு அழகா, நீ கருப்பாக இருந்தாலும் உன் முகத்திலே இருக்கிற களை அந்தச் சிவப்புக்காரியிடம் கிடையாது என்பார்கள். அவள் எப்போதும் புன்சிரிப்பாக இருக்கிறாள், நான் அப்படியா இருக்கிறேன் என்று கேட்டால், சதா, சிரிப்பது ஒரு அழகா? பெண் சிரித்தால் போச்சு, புகையிலை விரித்தால் போச்சு. நீ தான், சரி. இப்படித்தான் பெரிய மனிதவீட்டுப் பெண்கள் இருக்க வேண்டும். முகத்திலே தேஜஸ் இல்லையா? பல்லைக்காட்டினால் தானா அழகு என்று பதில் சொல்வார்கள். நாம் எந்தெந்த விதத்திலே குறுக்குக் கேள்விகள் போட்டாலும் எல்லாவற்றிற்கும் ஏதாவதொரு சமாதானம் சொல்லி நம்மை ஏய்ப்பார்கள். இது ஆண்களின் வேலைத்திறன்."

அக்கா கூறின உண்மையான மொழிகளை நான் பிறகு அனுபவத்தின் மூலம் பலதடவை கண்டேன். டாக்டரே! எத்தனைபேர், கிளியே, மணியே, கரும்பே என்றெல்லாம் என்னிடம் கொஞ்சினார்கள். கடைசியில் கைவிட்டார்கள். எத்தனையோ பேரை நானாக வீட்டுக்குப் போய் விட்டுத்தான் வாருங்களேன். வீட்டில் என்ன எண்ணுவார்கள் என்று சொல்லி அனுப்பி யிருக்கிறேன். ஏறெடுத்துப் பார்க்கப் பிறகு பலர் மறுத்து விட்டார்கள்.

அன்று மாலை அக்கா சொன்ன பரீட்சை நடந்தது. நான் கமலாவின் படுக்கை அறையின் மறு அறையிலே ஒளிந்து கொண்டிருந்தேன். அக்காவின் ஏற்பாட்டின்படி, அக்கா ஆள் அனுப்பியோ மாடிக்குச் சென்று ஜாடை செய்தோ எப்படியோ முத்துவை, எங்கள் வீட்டிற்கு வரும்படி செய்து விட்டாள். படுக்கையறையிலே, அக்கா கட்டிலின்மீது சாய்ந்து கொண்டு எதிரிலே ஒரு நாற்காலியிலே முத்துவை அமரவைத்துக் கொண்டதாகப் பிறகு தெரியவந்தது. அவர்களின் சம்பாஷணையை மட்டுமே நான் கேட்டேன் பக்கத்து அறையிலிருந்து. அதை அப்படியே கூறுகிறேன் கேளுங்கள்.

கமலா:— ஏன் அப்படியே நின்று கொண்டிருக்கிறீர்கள். உட்காரலாமே.

முத்து:— என்ன அன்பு கமலா உனக்கு! எவ்வளவு சோபிதமாகப் பேசுகிறாய்! என்ன சுந்தரமான முகம்.

கமலா:— வெறும் முகஸ்துதி; பெண்களை, அழகி, இந்திராணி, மேனகை என்றெல்லாம் புகழ்ந்து, ஆண்கள் ஏய்ப்பதே வாடிக்கை. அது கிடக்கட்டும்; அன்று தவன உற்சவத்தன்று உர்முடன் வந்தாளே ஒரு பெண், பொம்மை மாதிரி, அவளை விடவா நான் அழகு?

முத்து:— சந்தேகமா அதற்கு? பூர்ண சந்திரனுக்கும் தேய்பிறைக்கும், வித்தியாசமில்லையா?

கமலா:— அவள் என்னைவிட இளையவள்.

முத்து:— வயதில் மட்டுமல்ல. வடிவத்திலும்.

கமலா:— என்னைவிட அவள் நல்ல சிவப்பு.

முத்து:— சாயம் பூசிக்கொண்டவள்போல்!

கமலா:— நான் அழகா? என் தங்கை விமலா அழகா?

முத்து:— கமலா, வீணாக ஏன் பேசவேண்டும். நீயே அழகி. உன் தங்கையின் முகத்திலே அசடு சொட்டுமே. எனக்குத் தெரியாதா என்ன? நான் பலமுறை பார்த்திருக்கிறேன். பித்துக்கொள்ளி போல முறைத்து முறைத்துப் பார்க்கும்.

கமலா:— பார்ப்பது மட்டுந்தானா?

முத்து:— உன்னிடம் மறைப்பானேன். கண் அடிக்கும், சிரிக்கும், கடிதங்கூட எழுதி இருக்கிறாள். நீ வெளியே சொல்லிவிடாதே. எனக்கு அவளிடம் பிரேமை கிடையாது. உனமீதே எனக்குக் காதல்; இது நிச்சயம்.

கமலா:— இதுதான் ஆண்பிள்ளையின் சுபாவம். எந்தெந்த நேரத்தில் எந்தெந்தப் பெண் எதிரிலே இருக்கிறாளோ, அவளே அழகி, அவளே ரூபவதி, அவளே ஒய்யாரி, என்று கூறுவார்கள். ஏதாவது கூறி ஏய்ப்பதே அவர்களின் வேலை.

முத்து:— இது சர்தாரணமாகப் பழக்கந்தான். ஆனால், காதல் கொண்டவன் இப்படி நடக்கமாட்டான்.

கமலா:— காதலும், சாதலும்; அதெல்லாம் புத்தகத்தில், நாடகத்தில், சினிமாவில. உலகத்திலே கண்ணுக்கு ஏற்றதைக் கிடைத்தவன் கொள்ளை கொள்வதுதான் காதலாக இருக்கிறது. கமலாவின் முகத்தில் நீரோட்டம் இருக்கும்வரையில், கமலாவிடம் காதல், பிறகு விமலா, பிறகு சாமலா. ஆண்கள் கதையே அதுதானே.

முத்து:— எல்லா ஆண்களும் அப்படி அல்ல.

கமலா:— ஆமாம், எல்லாப் பாம்புகளும் ஒரே மாதிரியாக இருக்கிறதில்லையே, அதுபோல. சில தீண்டினதும் தீர்ந்தது. சில தீண்டினால் உடல் முழுதும் வீக்கம். ஆனாலும் எந்தப் பாம்பு நல்லது? எது விஷமில்லாத ஜந்து?

முத்து:— நானும் ஓர் பாம்புதானா?

கமலா:— ஆமாம்! கண்ணாடி விரியன். தோல் பளபளப்பு. ஆனால் விஷப்பையோ நிரம்பியிருக்கிறது. ஆனால் எனக்குக் பாம்புக்கடி அவ்வளவு ஏறுவதில்லை.

முத்து:— நானா கண்ணாடிவிரியன்? ஆஹா! கமலா! நீ எவ்வளவு வேடிக்கையாகப் பேசுகிறாய். நான் பாம்பானால் இன்னேரம் உன்னைத் தீண்டி விட்டிருப்பேனே!

கமலா: நான் கட்டிப் போட்டு விட்டேனே.

முத்து: கட்டிவிட்டாயா? இல்லையே, உன் கைகள் என் உடலைத் தழுவவில்லையே.

கமலா: என் "சக்தி" உன்னைக் கட்டிப் போட்டு விட்டது பிடாரன் ஊதுகுழல் கேட்டதும் புற்றிலிருக்கும் நாகம் படமெடுத்து ஆடுவது போல் ஆடுகிறாய்; மோகனராகம், அதற்கேற்ற நர்த்தனம். இந்த நாக நர்த்தனத்தை விமலா கண்டால் எப்படி இருக்கும்.

முத்து: கமலா! நீ என்னை வலிய வம்புக்கு இழுக்காதே. நான் ஜெமீன்தார்போல் உனக்கு சொர்ணாபிஷேகம் செய்யமுடியாது. ஆனால் என் அன்பை, இளமையை உனக்கு அபிஷேகிக்கிறேன்.

கமலா: நான் கல்லுச்சாமியல்லவே!

முத்து: என் கண்கண்ட தெய்வம் நீ!

கமலா: பக்தன் கோரும் வரம் படுக்கையறைதானே!

முத்து: கேலி செய்யாதே கமலா.

கமலா: ஜாலம் ஏன் செய்கிறீர்?

முத்து: காலம் வீணாகக் கழிகிறது.

கமலா: அவசரப்படாதீர்.

முத்து: கர்ப்பகோடி காலமும் பொறுத்துக்கொண்டிருப்பேன். ஆனால் உன் கடைக்கண் மட்டும் சம்மதத்தைத் தெரிவிக்கட்டும்.

கமலா: முழுக் கண்ணும் கூறும் பொறுத்தால். முதலிலே இரண்டு விஷயம் எனக்குத் தெரிய வேண்டும். நான் விமலாவைப் போல, கலியாணம் செய்து கொள்ளும்படி உம்மைக் கேட்கப் போவதில்லை. நீர் யாரை வேண்டுமானாலும் கலியாணம் செய்து கொள்ளும். ஆனால்............

முத்து: உன்னைத் தவிர வேறு ஒரு மாதையும் எண்ணக் கூடாது, அவ்வளவுதானே. நீட்டு கையை, சத்தியம் செய்கிறேன்.

கமலா: அதை வேறு இடத்தில் செய்யுங்கள். இனிமேல் அந்தத் தாசி கமலா வீட்டுப் பக்கம் கூட போக மாட்டேன், இது சத்தியம், சிவன் ஆணை, என்று உமது மனைவியிடம் கூறும். எனக்கேன் சத்தியம். எத்தனையோ சத்திய சந்தர்களின் சாயம் வெளுக்கத்தானே, நாங்கள் இருக்கிறோம்.

முத்து: வேறு என்னதான விஷயம்?

கமலா: நான் வேண்டுமா? விமலா வேண்டுமா? இருவருமா?

முத்து: விபரீதமான கேள்வியாக இருக்கிறதே.

கமலா: விபரீதமான உலகம் அல்லவா? கேள்வி மட்டுந்தானா விபரீதம்? தாசிப்பெண்ணிடம் காதல் பேசுகிறீரே, இது விபரீதமாகத் தோன்றவில்லையா?

முத்து: கமலா. இனி நான் போக வேண்டியதுதான்.

கமலா: சலித்துவிட்டதோ!

முத்து: இல்லை. வீணாகப் பொழுது போக்க விருப்பமில்லை.

கமலா: விருந்தை எதிர் பார்த்தீர்.

முத்து: அழையா வீட்டுக்குள் நான் வரவில்லையே.

கமலா: நானும் காரணமின்றி அழைக்கவில்லை. கட்டிலறைக்குள் உம்மைச் சேர்க்கவில்லை. என் தங்கை உமது தளுக்கைக் கண்டு மயங்கினாள். அவளுக்கு விஷயம் தெரியவே இதனைச் செய்தேன். இதோ அவள் வருகிறாள், அவளிடம் உமது முகத்தைக் காட்டும்."

என்று கூறிவிட்டு, என் அக்கா "விமலா, விமலா வாடியம்மா. வந்து உன் "நாதனை" அழைத்துப்போடி" என்று என்னைக் கூவி அழைத்தாள். நான் சம்பாஷணையைக் கேட்டு மிக மிக மனம் பதறி, உடல் துடித்து, வியர்த்துப் போயிருந்தேன். அந்தச் சாகசக்காரனின் கழுத்தை நெரித்து விடவும், புலிபோல் அவன் மேல் பாய்ந்து உடலைக் கீறி, பிய்த்து உள்ளத்தை எடுத்துப் பரிசோதிக்க வேண்டும் என்றும் எனக்குத் தோன்றிற்று. ஆனால் நானோ பெண். தாசி. ஊரார் என் மீது தானே வீண் அபவாதத்தைச் சுமத்துவார்கள். எனவே, கோபம் என்னை அழச் செய்தது. ஆங்காரம் இருந்து மட்டும் பயன் என்ன? அவன் ஓர் ஆண் மகன். உயர்குலம். நானோ விலைமகள். இருப்பினும் அவனது மனம் புண்ணாகி இரணமாகி விடும்படி அவனைப் பேசி ஏசி, காரித்துப்ப வேண்டுமென்று தோன்றிற்று. அறையை விட்டுக் கிளம்பினேன் ஆக்ரோஷத்துடன்.

அதே நேரத்தில், என் பின்புறமிருந்து ஒரு பலமான கை என் வாயைப் பொத்திவிட்டு என்னைத் தடை செய்து நிறுத்தி விட்டது. திடுக்கிட்டுத் திரும்பினேன். ஜெமீன்தார் என்னை அங்ஙனம் தடுக்கக் கண்டு, மனம் பதறினேன். திடீரென நேரிட்ட இந்தப் பயங்கரப் பிரவேசம் என் நாக்கை அடக்கி விட்டது.

கமலாம்பிகா! வெளியே வரலாம் —என்று கர்ஜித்தார் ஜெமீன்தார்.

ஆ! என்று கமலா அலறிக் கொண்டே ஆடை நெகிழ அறையை விட்டு வெளி வந்தாள். அவள் பின்னோடு, மருண்ட பார்வையுடன் முத்துவும் வந்தான்.

ஜெமீன்தாருக்கு, முகம் சிவந்தது. கமலாவின் முகம் வெளுத்து விட்டது. முத்து நிற்குமிடத்திலேயே நாட்டியமாடினான். எனக்கோ மயக்கம் வரும் போலிருந்தது.

"துரோகி" என்ற கூச்சல் கேட்டது. ஜெமீன்தாரின் கைகள் கமலாவின் ஜடையைப் பிடித்து இழுக்கவும், ஐயோ, அம்மா, அடடா, நான் இல்லை, என்று மாறி மாறி கூக்குரல் கிளம்பவும் கேட்டேன். சோகம், பயம், மயக்கம். என் கண்கள் சுழன்றன. அதைவிட வேகமாக என் மனம் சுழன்றது. நான் ஈனக் குரலில் அக்கா, அத்தான், என்று கூவினேன், மயங்கிக் கீழே வீழ்ந்தேன்.

மயக்கம் தெளிந்து எழுந்தேன். வீடு நிசப்தமாக இருந்தது. நான் கீழே சாயும்போது இருந்த அமளியின் அறிகுறி தென்படவில்லை. ஜெமீன்தாரும் இல்லை. அக்காவையும் காணோம். முத்துவும் இல்லை. எனக்குத் திகில் பிடித்துக்கொண்டது. நான் கனவு கண்டுதான் மிரண்டேனோ என்றும் தோன்றிற்று. ஆனால் கனவல்ல, நிஜமாக நடந்த சம்பவமே என்பதை நிரூபிக்க, சுவரிலே இரத்தக்கறை; என் அழகிய அக்காவின் கூந்தலில் ஓர் பிடி அந்த இரத்தத்துடன் ஒட்டிக்கொண்டிருந்தது. கமலாவின் தலையை ஜெமீன்தார் சுவரிலே பிடித்து இடித்தாரோ என்னவோ; அந்தோ பாபமே! என் பொருட்டு என்ன கதி நேரிட்டது அக்காவுக்கு என்று எண்ணினேன். அக்காவின் அறைக்கு ஓடினேன். அக்கா, படுக்கையில் படுத்துக் கொண்டு விம்மிக் கொண்டிருந்தாள். "ஐயோ அக்கா, என்னால் உனக்கு இந்த அவதி வந்ததே" என்று கூறி, தலையைத் தூக்கி என் மடிமீது வைத்துக் கொண்டேன். அக்கா அலங்கோலமாக இருந்தாள். மண்டையிலே பலமான காயம். வாயிலிருந்தும் இரத்தம் ஒழுகி, அதன் கறை, அவளது அதரத்தைக் கப்பிக் கொண்டிருக்கக் கண்டேன். கன்னம் வீங்கியிருந்தது. ஜமீன்தாரின் கைவிரல்கள் முத்திரைபோல், அவளது கன்னத்தில் காணப்பட்டன. கை வளையல்கள் நொறுங்கி, உடலைக் கீறிக்கொண்டிருந்தன. அதனால் ஏற்பட்ட வடுக்கள் பல. சேலையின் ஓரம்கிழிந்துபோய்த்தொங்கிக்கொண்டிருந்தது. அவளது இடுப்பருகே

என் கைபட்டபோது, "ஆ! தொடாதே" என்று கூவினாள். அங்கு; அவர் உதைத்ததினால் உள் காயம். முகம் அழுது அழுது கோரமாகிவிட்டிருந்தது. நான் இந்தக் காட்சியைக் கண்டு அழத்தொடங்கினேன். "அக்கா நமது வாழ்க்கை எவ்வளவு கேவலமாக இருக்கிறது" என்று கூறினேன்.

"விமலா, நான் எவ்வளவோ சமாதானம் சொன்னேன். அந்த முத்து ஜெமீன்தாரரின் கால் தன் முதுகில் பாய்ந்ததும் ஓடிவிட்டான். இருந்து சமாதானம் கூறவில்லை.

ஆனால், அந்த நேரத்தில் ஆண்டவன் நேரில் வந்து சாட்சி சொன்னாலும் அவர் நம்பியிருக்கமாட்டார். என்னை இவ்வளவு அலங்கோலமாக்கினர். இதுமட்டுந்தானா விமலா? என் மண்டையில்பட்ட அடியோடு, ஜெமீன்தாரின் கோபம் தீர்ந்துவிடாது. நமதுவாழ்க்கைக்கே இது பலமான அடியாகப்போகிறது. நினைத்தால் கூட நெஞ்சு பதறுகிறது. உங்களைத் தொலைத்துவிட்டு மறு வேலை பார்க்கிறேன்—என்று கூறிவிட்டுப் போனானே பாவி—அவன் இன்னமும் நம்மை என்னென்ன பாடுபடுத்துவானோ! என் உடல் அலங்கோலமானது போல், நமது குடும்பத்தையே அலங்கோலமாக்கிவிடுவானோ. அதைநினைத்தால் எனக்குப் பயம் அதிகரிக்கிறது. அவன் பேச்சுத்தானே இந்த ஊருக்குச் சட்டம். அவன் கிறும் கோட்டை யாரும் தாண்டமாட்டார்களே! அவனது கோபம் நம்மை அழித்துவிடுமே. நமதுகதி என்னாகுமோ"—என்று கூறி ஏங்கினாள்.

ஜெமீன்தாரரின் அபிமானத்தைப் பெற்றதனாலேயே எங்களுக்குச்செல்வமும் செல்வாக்கும் இருந்தது. ஊரார் எங்கள் குலத்திலேயாருக்கும் தராதமதிப்பு எங்களுக்குத் தந்தனர். பூ போனபிறகு நாரை யார் விரும்புவார்கள்? ஜெமீன்தாரரின் கோபத்துக்காளான எங்கள் குடும்பம் இனி எவருடைய ஏசலுக்கும் தாக்குதலுக்கும் இலக்காகிவிடும் என்பது எனக்குத் தெரியும். கருமேகமற்ற வானத்தில்தானே சந்திரன் தன் முழுச் சோபிதத்தையும் காட்டமுடியும். பெருத்த விருட்சமானாலும் புயல் அடித்தால் பூமியில் வீழ்ந்துதானே போகும். அதுபோல் தானே எங்கள் கதியும். ஏழைகளின் உரிமை பற்றியும் எல்லோரும் சமம் என்பது பற்றியும் எத்தனையோ கதாப்பிரசங்கிகள் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் ஏழைகள் படும் பாட்டை கண்ணால் கண்டிருக்கிறேன். குசேலரின் குழந்தை குட்டிகளுக்குக் கண்ணன் உதவிய கதை படிக்கக்கேட்டு, கதைபடித்தவருக்கு, கற்கண்டு போட்டுக் காய்ச்சியபால் கொடுத்துமிருக்கிறோம். ஆனால் பன்றி குட்டி போடுவதுபோல் இப்படிப் பிள்ளைகளைப் பெறுவானேன், தெருவில் அலையவிடுவானேன் என்று பலரும் சொல்லக் கேட்டுமிருக்கிறேன். நிலைகுலைந்தால், நிந்தனைக்கு ஆளாகவேண்டியே வரும். இந்தநியதி மாறவில்லை. இந்நிலையில் எங்கள் கதி என்ன? என்று எண்ண எண்ண, பயமே மேலிட்டது.

(தொடரும்)

# இதற்குமுன் இல்லாத புதிய இயக்கம்

[ஜோசப்மேக்காபி]

சில வருஷங்களுக்கு முன், ஆக்ஸ்போர்டு சர்வகலா சங்கத்தைச் சேர்ந்த ஓர் அழகிய அறையில் பண்டிதர்கள் நிறைந்த கூட்டமொன்றில் நானும் போய் உட்கார்ந்தேன். அப்போது நாங்கள் ஒரு புதிய விஷயத்தைப்புற்றி வார்த்தையாடிப்பொழுது போக்கினோம். அவ்விஷயம் பண்டிதர்களுக்கு ஏற்றதுதான். நாங்கள் யாவரும் சரித்திரத்திலோ, அல்லது இலக்கியத்திலோ ஏதேனும் ஒன்றில் நல்ல பாண்டித்ய முடையவர்களாகவே இருந்தோம். எங்களில் ஒவ்வொருவருக்கும் எப்படிப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கப் பிரியம் என்பதைப் பற்றி எடுத்துப் பேசினோம்.

உடனே நாங்கள் எங்களுடைய முடிவுப்படி பயபக்தியுள்ள எகிப்திலிருந்து, வியப்பளிக்கும் பாபிலோனுக்கும், மோக மிகுந்த சிரியாவிற்கும், மானசிகப் பிரயாணம் செய்தோம். அலங்கார மிகுந்த கலைகளைச் சூடிய ஏதென்ஸ் நகரமும், திட்டவட்டமான ஒழுக்க முறைகளைக் கொண்ட ஸ்பார்ட்டா நகரமும், மகா வெற்றிப் பிரதாபங்களைப் பெற்ற ரோமாபுரியும் எங்களில் யாவரையும் தேன் குடித்த நரிபோல் சொக்க வைத்தன. கலைகளின் முன்னேற்றத்தில் திகழ்ந்த இத்தாலியும், 14-வது லூயி காலத்திய பிரான்ஸும், ஷேக்ஸ்பியர் காலத்திய இங்கிலாந்தும், அவ்வக்காலத்திய மக்கள் வாழ்க்கையின் இயல்பையும், சுதந்திரத்தையும் எங்கள் மானசிக நோக்கின் முன் சித்தரித்துக் காட்டி நின்றன.

ஆனால் நாம் வசித்து வரும் தற்காலமே எக்காலத்தையும் விட மகா ருசிகரமானதும், மகோன்னதமானதும் என்று நாங்கள் எல்லோரும் பொதுவாய் ஒப்புக்கொண்டோம். தற்காலந்தான் உலகம் சீர்பட்டு, புத்துயிரும் புதுவாழ்வுமடையும் நோக்கமும் ஊக்கமுங் கொண்டு ஆக்கமடையும் காலமாயிருக்கிறது. நம்முடைய ஆசைகளை உருவாக்கப் பெரும் பெரும் கலா நிபுணர்களோ, அல்லது அவைகளின் பலன்களைக் கண்டுபிடிக்கச் சிறந்த அரசியல் அறிஞர்களோ இல்லை. ஆயினும் மனிதன் இதற்கு முன் அறிந்திராத சிலாக்யமான ஒரு நல்ல உலகம் அமைவதற்கு அது எப்படியோ கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. உல

(2-ம் பக்கம் பார்க்க)




Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi Street. Conjeeveram.